# ஞானச்சுடர்

சித்திரை 2023

304ஆவது மலர்




வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

noolaham.org | aavanaham.org

# குறள் வழி



**வேண்டாமை யன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை**
**யாண்டும் அஃதொப்ப தில்.**

**பொருள் :** ஒரு பொருளையும் விரும்பாமையைப் போன்ற மேலாகிய செல்வம் இவ்வுலகத்தில் இல்லை; மறு உலகத்திலும் அது போன்றது இல்லை. (363)

**தூஉய்மை யென்ப தவாவின்மை மற்றது**
**வாஅய்மை வேண்ட வரும்.**

**பொருள் :** ஒருவருக்குத் தூய்மை என்று சொல்லப்படுவது ஆசை இன்மை; அது மெய்மையாகிய கடவுளை வேண்டத் தானே வரும். (364)

---

# நற்சிந்தனை

*மறப்பேனோ குருநாதன் தன்னை*

**சின்னத்தங்கம்**



தொழுது வணங்கிடுவாய் துரியநிலை சாருமட்டும்
அழுதழுது ஆண்டவனைச் - சின்னத்தங்கம்
ஆன்மலாபம் தேடிடடி 07

முழுதுமுண்மை யென்றுமுன்னாள் மோனகுரு சொன்னாரடி
பழுதொன்று மில்லையடி - சின்னத்தங்கம்
பவுத்திரமாய் வாழ்ந்திடடி. 08

காண்பானுங் காட்சியும்போய்க் காட்சிப் பொருளுமற்று
மாண்புடனே நின்றிடுவாய் - சின்னத்தங்கம்
மரணபய மில்லையடி 09

சேண்பொலியுந் திருவடியே சித்தத்திலெப் போதுமுண்டு
வீண்காலம் போக்காதே - சின்னத்தங்கம்
வேண்டிப் பணிந்திடுவாய் 10

மானாபி மானம்விட்டு மண்ணும்விண்ணுந் தெரியாமல்
தானான தன்னிலையில் - சின்னத்தங்கம்
தனியே யிருந்திடடி 11

தானான தானேயல்லால் தனக்குதவி யாருமில்லை
மோன நிலைதனிலே - சின்னத்தங்கம்
மூழ்கி யிருந்திடடி 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்

வெளியீடு - 3  சுடர் - 304

**2023** **பொருளடக்கம்** **சித்திரை**


| | | |
|---|---|---|
| சோபனங்கள் வரமாகும்... | கே.எஸ். சிவஞானராஜா | 01 - 03 |
| இறைவனுடன் நேரில்... | மூ. சிவலிங்கம் | 04 - 06 |
| சமயங்களின் சமாச்சாரம் | மு. செல்லத்தம்பி | 07 - 09 |
| திருமூலர் தவமொழி | ஆ.தா.இ. ஜெயபாலன் | 10 - 13 |
| வர்ணம் தீட்டுதல்... | முருகவே பரமநாதன் | 14 - 17 |
| ஆனந்தசாகரம் | திருமதி பா. சிவனேஸ்வரி | 18 - 20 |
| மனிதர்களுடைய வாழ்க்கை... | பு. கதிரித்தம்பி | 21 - 23 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 24 - 25 |
| ஆன்மீகமும் நாமும் | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 26 - 27 |
| ஓங்காரநாடி எனும் சுழுமுனை | கு. சிவபாலராஜா | 28 - 29 |
| கந்தன் கவசம் | பொ. பாலேஸ்வரன் | 30 - 32 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 33 - 36 |
| ஆனைக்கோட்டை அருள்மிகு... | இ. சரவணபவன் | 37 - 40 |



**வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)**

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

**தொலைபேசி இல: 021 321 9599, 021 226 3406**

**அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்**

Printed & Published By:
Sannithiyan Achchirama Saiva Kalai Panpaddu Peravai.
Selvasannithi, Thondaimanaru.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்
# பங்குனி மாத வெளியீடு

**வெளியீட்டுரை:-**

ஞானச்சுடர் 303ஆவது மலருக்குரிய வெளியீட்டுரையினை இளைப்பாறிய அதிபரும் சமூகப் பணிகளில் ஆர்வமுடையவருமாகிய திரு வ. கணேசமூர்த்தி அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தம் உரையில் சந்நிதியான் ஆச்சிரமம் ஆற்றும் சகலவிதமான சமய, சமூகப் பணிகளை கூடியிருந்த அடியார்களுக்கு விளக்கிக் கூறியதோடு, ஆற்றும் பணிகளுக்கெல்லாம் மகுடம் வைத்ததுபோல் சிறந்து விளங்குவது ஞானச்சுடர் வெளியீடு என்றே கூறலாம். இம் மலர் வெளிவருவதன் ஊடாக பல ஆன்மிகவாதிகளின் எழுத்தாற்றல் களுக்கு களம் அமைத்துக் கொடுக்கும் ஒரு தளமாகவும் விளங்குகின்றது. அவ்வகையில் இம் மலர் வெளியீடு தொடராக வெளிவர எல்லாம் வல்ல சந்நிதியானை வேண்டுதல் செய்வதோடு தனது வெளியீட்டுரையினை நிறைவு செய்தார்.

**மதிப்பீட்டுரை:-**

பங்குனி மாத 303ஆவது ஞானச்சுடர் மலருக்குரிய மதிப்பீட்டுரையினை ஆசிரியராக விளங்கும் திரு நி. பாபுதரன் அவர்கள் ஆற்றினார்கள்.

நாட்டில் இடம்பெற்ற கொரோனா நோயின் தாக்கத்தின்மூலம் பலவித இடர்பாடு களை நாம் சந்தித்திருந்தாலும் மாணவர்களுக்குரிய கற்றல் செயற்பாடுகள் பின்தங்குவதை யிட்டும் அதனை எவ்விதத்திலும் சீர்செய்ய வேண்டும் எனும் முனைப்புடன் செயலாற்றிக் கொண்டிருந்தாலும், ஆச்சிரமம் ஆற்றும் பணிகளையும் ஆச்சிரமத்தோடு நீண்டகால தொடர்பில் உள்ள எங்களால் புறம்தள்ளிவிட முடியாது. இப்பணிகளில் எம்மை இணைத்து அமரராகிவிட்ட சகோதரர் நித்திய தசீதரன்தான் காரணம். இத் தருணத்தில் அவரது எண்ணத்துடன் இம் மலருக்குரிய மதிப்பீட்டுரையை நான் ஆரம்பிக்கின்றேன்.

வடபுலத்தில் ஆன்மீகம் தாங்கிவரும் ஒரு சில நூல்கள் இருந்தாலும் அவற்றுக் கெல்லாம் முன்மாதிரியாக விளங்குவது ஞானச்சுடர் என்று கூறினால் அது மிகையாகாது. இம் மலர் வெளியீட்டினூடாக பல இளம் ஆன்மீகவாதிகள் தம் கருத்துக்களை வெளிக் கொண்டு வருகிறார்கள் என்று கூறி மலரில் இடம்பெற்ற ஒரு சில ஆக்கங்களில் பொதிந் திருந்த கருத்துக்களை அடியார்களுக்கு விளக்கிக் கூறி தனது மதிப்பீட்டுரையை நிறைவு செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

## குப்பிழான் ஐ. சண்முகலிங்கன் ஆசிரியர்

சந்நிதியான் ஆச்சிரமத்தின் சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் செயற்பாடு களில் நீண்டகாலமாக இணைந்து செயற்பட்ட திரு ஐயாத்துரை சண்முகலிங்கன் அவர்களின் மறைவு தமிழ் கூறும் சைவ உலகிற்கு பேரிழப்பாகும். அன்னார் பிறந்த மண்ணை யும் புகுந்த மண்ணையும் விருப்புடன் நேசித்த பண்பாளர் ஆவார். கலைப் பட்டதாரியான அவர் வாழ்வில் தமிழையும் சமயத்தையும் நேசித்த துடன் பிறந்த மண்ணை மறக்கக் கூடாது என்பதனால் தன்னை அவர் குப்பிழான் சண் என்றே வெளிப் படுத்திக்கொண்டார். ஆரம்பத்தில் எழுதுவினைஞராக பணியை ஆரம் பித்தபோதும் கல்வித் தானமே மேலானது என்பதை வாழ்க்கையில் நேசித்தமையால் ஆசிரியத் தொழிலை விரும்பி ஏற்று நெல்லியடி மத்திய கல்லூரியில் இருபத்திரண்டு ஆண்டு காலமாக மாணவ சமூகத்திற்கு தமிழையும் சமயத்தையும் பொருளியலையும் வாரி வழங்கி ஆசிரியத் தொழிலில் நிறைவு கண்டார். இன்று விண்ணுலகம் சென்றமை கல்விச் சமூகத்திற்கு பேரிழப்பாகும். எனினும் அவரிடம் கற்ற மாணவர்கள் தமிழை பல்கலைக் கழகம் வரை போதிக்கின்றமை அவர் தந்த வரப்பிரசாதமாகவே நாம் கருதுகின்றோம்.



குப்பிழான் ஐ. சண்முகலிங்கன் அவர்கள் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையால் வெளியிடப்பட்டு இன்று 304ஆவது இதழை வெளியிடும் ஞானச்சுடருக்கு கட்டுரைகள் எழுதியமை, வெளியீட்டுரை, மதிப்பீட்டுரைகளை வழங்கியமை போன்ற காத்திரமான பங்களிப்பை இன்று பதிவு செய்கின்றோம். அவரது வெளியீட்டுரை, மதிப்பீட்டுரை நிகழ்வுகள் ஆரோக்கியமான விமர்சன ரீதியான வழிகாட்டும் செயற்பாடாக அமைந்தமை ஞானச்சுடரின் வலுவான வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பை செய்வதாக அமைந்தது என்பதை இந்நாளில் உறுதியுடன் பதிவு செய்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் அவர்கள் சந்நிதி வேலவன்மீது மிகுந்த பக்திகொண்டு அவனை வழிபட்டு அருள் பெற்றதுடன் ஆசிரிய பணிகளிலும் தன்னை இணைத்துக்கொண்டவராவார். சமூகத்திற்கு சொல்ல வேண்டிய சமய சமூக சிந்தனைகளை ஆச்சிரம வாராந்த சமய நிகழ்வுகளில் உரைகளாகவும் ஆற்றி பலரது பாராட்டையும் பெற்றவராவார். அவர் தம் பணியை துணைவியாருடன் இணைந்து ஆற்றியமை பெரும் சிறப்பாகவே அமைந்திருந்தது. அத்துடன் உடல் இயலாமை காலத்திலும் ஆச்சிரம பணிகளும் சிந்தனைகளும் எவ்வித குறையுமின்றி நடைபெற்றது. ஞானச்சுடரின் 301ஆவது இதழ் 2023ஆம் ஆண்டு தை மாதம் வெளியிடப்பட்டபோது வருகை தந்து வாழ்த்துரையை வழங்கியமை 302ஆவது இதழ் வெளியிடப்பட்டபோதும் பாரியார் வெளியீட்டுரை வழங்கியபோதும் வருகை தந்தமை எம் கண்முன்னே நிற்கும்போது அவரது மறைவு கேட்டு பேரதிர்ச்சி அடைந்தோம்.



அவரது பணி ஈழத்து இலக்கிய உலகில் சிறுகதை, கவிதை, இலக்கிய விமர்சனம் எனப் பன்முகப்படுத்தப்பட்ட தளத்தில் ஆற்றி தனது இலக்கிய ஆளுமையை வெளிப்படுத்தி ஈழத்தின் முதுபெரும் எழுத்தாளராகவும் விளங்கி உள்ளார். சாதாரணங்கம் அசாதாரணங் களும், கோடுகளும் கோலங்களும் உதிரிகளும், ஒரு தோட்டத்தின் கதை, ஒரு பாதையின் கதை என ஐந்து சிறுகதைத் தொகுதிகளையும் பிரபஞ்ச சுருதி எனும் கவிதைத் தொகுதியையும் வெளியிட்டுள்ளார். அவரது பணியினால் கலாபூஷணம் விருது, ஆளுநர் விருது, செம்மண் சுடர் விருது, இலக்கிய ஞான ஜோதி போன்றவை வழங்கி கௌரவிக் கப்பட்டுள்ளது.



அவரது ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல சந்நிதி வேலவனை வேண்டி பிரார்த்திப்பதோடு, குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ப்பூங்கா அச்சக உரிமையாளர் திரு சி. கணேசலிங்கம் அவர்களின் தாயார் சிவகுரு வள்ளியம்மை அவர்கள் 28.04.2023 அன்று அமரராகிவிட்ட செய்தி அறிந்து அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



1998ஆம் ஆண்டு தொடக்கம் எமது சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் ஆரம்பிக்கப்பட்ட ஞானச்சுடர் மலரினை மாதந் தோறும் தமது அச்சுக்கூடத்தில் மெருகேற்றித் தந்த திரு சிவகுரு கணேசலிங்கம் குடும்பத்தினரும் எம்மோடு இணைந்து ஆச்சிரமப் பேரவையின் பணிக்கு சிறப்பு செய்த பெருமையாளர்கள் என்றே கூறவேண்டும்.

அவரது அன்னையாரின் ஆத்மா சந்நிதி வேலவனது பாதக்கமலங்களில் சாந்தி பெற சந்நிதி வேற்பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்நிதியான் ஆச்சிரமத்தின் வளர்ச்சிக்கு ஆரம்ப காலங்களில் (1998ஆம் ஆண்டளவில்) பெரிதும் ஆதரவு தந்த வரிசையில் 29.04.2023 அன்று அமரராகிவிட்ட ஐயாத்துரை சிவநாதன் அவர்களை நாம் மறக்கவே இயலாது.



ஆரம்ப காலங்களில் ஆச்சிரமத்தில் நடைபெற்ற அன்னதானப் பணிக்கு அரிசி தட்டுப்பாடு ஏற்படும் காலங்களில் எல்லாம் அவரால் அன்று இயக்கப்பெற்ற டிஸ்கோ அரிசி ஆலையில் இருந்து தேவையான அரிசியைத் தந்து ஆச்சிரமத்தில் நடைபெற்ற அன்னதானப் பணிக்கு முழு மனதோடு ஆதரவு நல்கிய பண்பாளர்.

அவர் மறைந்தாலும் அவர் அக்காலத்தில் செய்த ஆதரவினை எக்காலமும் மறக்க இயலாது. அவரது ஆத்மா சந்நிதி வேலவனின் பாதார விந்தங்களில் அமைதிபெற சந்நிதியானை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரைமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**திருமதி S. லோஜினி**
(உதவி முகாமையாளர், மக்கள் வங்கி, வெள்ளவத்தை)

**அப்பர்சாமி கோபாலகிருஷ்ணன்**
(இளை. முகாமையாளர், மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்)

**நா. உமாசங்கர்**
(கயூரி வீடியோ விஷன், அச்சுவேலி)

**நா. குகன்**
(குகன் ஸ்ருடியோ, பருத்தித்துறை)

**பொ. பாலசிங்கம்**
(பத்தமேனி, அச்சுவேலி)

**இராசையா சற்குணதாஸ்**
(ஊரெழு கிழக்கு, சுண்ணாகம்)

**திருமதி ஸ்ரீனிவாசன்**
(பழம்றோட், கந்தர்மடம்)

**Dr R. பாக்கியநாதன்**
(பொன்னையா வைத்தியசாலை, திருநெல்வேலி)

**திருமதி T. ராமச்சந்திரன்**
(யாழ்ப்பாணம்)

**திருமதி சிவராஜா**
(நல்நடத்தை உத்தியோகத்தர், கொழும்பு)

**செல்வி சாவித்திரி செல்வரெத்தினம்**
(யாழ்ப்பாணம்)

**வீ. கிருஷ்ணராஜா**
(ஆசிரியர், மானிப்பாய் இந்துக்கல்லூரி)

**ச. மனோகரி**
(சுண்ணாகம்)

**ஐயாத்துரை முருகதாசன்**
(யாழ். போதனா வைத்தியசாலை பரிசாரகர்)

**செ. மகேஸ்வரன்**
(கோப்பாய் வடக்கு)

**செ. சிவராசா**
(வாசிகசாலையடி, உடுப்பிட்டி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந. இந்திரகுமார்
(அச்சுவேலி)

சு. பாலச்சந்திரன்
(மருதனார்மடம், இணுவில்)

சு. வித்தியா
(புத்தூர்)

த. நடேசன்
(உரும்பராய் தெற்கு, உரும்பராய்)

க. கிரிதரன்
(திரு இல்லம், கரவெட்டி)

வீரையா சிவஞானம்
(நவக்கிரிமேற்கு, புத்தூர்)

க.கு. கிருபாகரராசா
(பிரதானவீதி, ஆவரங்கால்)

இ. மனோகரன்
(மனோ லைற், கோப்பாய்)

சி. நந்தகுமார்
(வங்கி முகாமையாளர், நெல்லியடி)

ச. கனகராசா
(யாழ்ப்பாணம்)

சின்னத்தம்பி கிருஷ்ணானந்தன்
(உமாபதி தொலைத்தொடர்பகம், உரும்பராய்)

வ.க. சாம்பசிவம்
(வில்லூன்றி, யாழ்ப்பாணம்)

சி. அமிர்தசாகரன்
(அம்பாள் மோட்டோர்ஸ், ஆவரங்கால்)

தி. பாலசிங்கம்
(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)

சி. சுகிர்தலிங்கம்
(புலோலி கிழக்கு, பருத்தித்துறை)

T. இரவீந்திரதாஸ்
(சாமியன் அரசடி, கரவெட்டி)

அ. லோகநாதன்
(தெல்லிப்பழை)

உரிமையாளர்
(ஏகாம்பரம் ரெக்ஸ், யாழ்ப்பாணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**க. ஞானச்சந்திரன்**
(நாகலிங்கம்வீதி, கொக்குவில்)
**க. ஐங்கரன்**
(புலோலி)
**இ. ஸ்ரீஸ்கந்தராம்**
(உப தபாலதிபர், உரும்பராய்)
**வே. சந்திரசேகரம்பிள்ளை**
(சிறுப்பிட்டி, நீர்வேலி)
**K. இராமச்சந்திரன்**
(சங்கானை)
**த. இராஜசிங்கம்**
(நீர்வேலி)
**ம. புலேந்திரன்**
(கரணவாய், கரவெட்டி)
**கி. தவராசா**
(காந்தியூர், புலோலி)
**ஐ. சத்தியபாலன்**
(பலாலி வீதி, உரும்பராய்)
**க. இராஜேஸ்வரி**
(சுண்ணாகம்)
**செ. ஸ்ரீனிவாசன்**
(அல்வாய்)
**ஜெயகாந் மாதுமை**
(இன்பர்சிட்டி, பருத்தித்துறை)
**சுப்பிரமணியம் சுரேஸ்குமார்**
(மயிலணி வீதி, சுண்ணாகம்)
**க. கணேசதேவா**
(மாதகல்)
**அதிபர்**
(தமிழ்க் கந்தையா வித்தியாலயம், கந்தரோடை)
**வி. செல்வரெத்தினம் J.P**
(அராலிமத்தி, வட்டுக்கோட்டை)
**ஐ. குகேந்திரராணி**
(ஐயனார் கோயிலடி, சுண்ணாகம்)
**செ. மயூரன்**
(புன்னாலைக்கட்டுவன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ம. கந்தையா**
(சிவன்கோவிலடி, சாவகச்சேரி)
**க. மகேந்திரன்**
(சங்கத்தானை, சாவகச்சேரி)
**தங்கராசா கலாஜோதி**
(புன்னாலைக்கட்டுவன் தெற்கு)
**செல்வி பாலாம்பிகை கந்தசாமி**
(கட்டைவேலி, கரவெட்டி)
**S. தங்கேஸ்வராசா**
(காட்டுப்புலம்)
**ம. சிவானந்தம்**
(நாவலர் றோட், யாழ்ப்பாணம்)
**எஸ்.ரி. குமரன்**
(மல்லாகம்)
**பொ. காசிலிங்கம்**
(கொக்குவில்)
**கா. செல்லத்துரை**
(உடுவில், சுண்ணாகம்)
**வீ. புஸ்பநாதன்**
(உரும்பராய் வடக்கு)
**சந்திரசேகரம் மகிந்தன்**
(சிறுப்பிட்டி மேற்கு)
**தர்சினி பகீரதன்**
(உப தபாலதிபர், நீர்வேலி)
**கு. குணரூபன்**
(மீசாலை கிழக்கு)
**வ. ஆறுமுகம்**
(இளை. அதிபர், ஆவரங்கால்)
**கி. வரதராசன்**
(அச்சுவேலி தெற்கு)
**அ. சந்திரகுமாரன்**
(சந்திரகோட்டம், சுழிபுரம்)
**வி. நாகம்மா**
(பண்ணாகம் தெற்கு, சுழிபுரம்)
**சர்மிளா இராசலிங்கம்**
(கோப்பாய்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சோபனங்கள் வரமாகும் சோபகிருது" "தாபங்கள் தீர்க்கும் தமிழ்ப் புத்தாண்டு"

– திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள் –

"சோபகிருது தன்னில் தொல்லுலகெலாஞ் செழிக்கும்
கோபமகன்று குணம்பெருகும் - சோபனங்கள்
உண்டாகும் மாரிபொய்க்காமல் பெய்யும் எல்லாம்
உண்டாகும் என்றே உரை"

தமிழர்தம் வாழ்வில், அமிழ்தான ஒரு பண்டிகையாக அதிசயமாகி ஆற்றுப்படுத்த வரும் அர்த்த புஷ்டியான திருநாளே சித்திரைத் தமிழ்ப்புத்தாண்டு ஆகும்.

பன்னெடுங்காலமாக, பாரம்பரிய சம்பிரதாயங்களோடு, பஞ்சாங்க விதிமுறைகளை அனுசரித்து பத்தியமாகவும் பயபக்தியாகவும் கொண்டாடப்படும் ஆன்மீகப் பான்மையோடு இசைந்த ஆனந்தநாளே சித்திரை வருடப் பிறப்பாகும்.

இலங்கையில், தமிழ் சிங்கள இரு சமூகத்தவர்களும், பிரமாதமாகக் கொண்டாடி வரவேற்கின்ற பேறானதொரு புதுவருடப் புண்ணிய நாளாக இந்நாள் சிறப்பாகப் போற்றப்படுகிறது. சித்திரை புதுவருடப் புத்தாண்டாகிய இந்நாள் அனைவரும் சமம் என்ற ஒற்றுமையின் பொன் நாளாக அனைவராலும் விரும்பப்படுகிறது. அனுசரிப்பும், ஆக்க ஊக்கமும், அன்னியோன்னியமும் எல்லோர் மனதிலும் மிளிருமாயின் இலங்கை உலகத்திலே சுவர்க்கபுரியாக மாறும் என்பதில் ஐயமில்லை. ஆன்மீகமும், அரசியலும், அறிவியலும், மொத்தத்தில் அனைவருமே வாழ்த்துகின்ற புதுவருடமாக "சோபகிருது" பிறக்கின்றது.

இம்முறை இந்தப் புதுவருடமானது நீடித்த ஆயுள், ஆரோக்கியம், பாதுகாப்பு, சிறுவர் நலன், பெண்கள் நலன், வறுமை ஒழிப்பு விவசாய மேம்பாடு, தொழிலாளர் மேம்பாடு, மலையக வாழ்வாதாரம், கடற்றொழில் பாதுகாப்பு, சுய பொருளாதாரம், சேமிப்பு, போஷாக்கு, பெண் தலைமைத்துவக் குடும்பம், போதை ஒழிப்பு, தொழில் வழிகாட்டல், கைதிகள் நலனோம்பு, நீர் மற்றும் மின்சார பாவனை காடு வளர்ப்பு, கால்நடைகள் பாதுகாப்பு வீதி நடைமுறை ஒழுங்கு, விபத்துக்களுக்கான எச்சரிக்கை ஆகியவற்றிலே கூடிய கவனமோடு பிறப்பதற்காய் "சோபகிருது" வருடத்தை 14.04.2023 வெள்ளிக்கிழமை உளம் பூரித்து வரவேற்கின்றோம்.

கலியுகாதி சுத்ததினம் 1871583, நாடி 19 விநாடி 53, தற்பரை 45 இற்குச் சரியான சோபகிருது வருஷம், சித்திரை மாதம், முதலாம் திகதி, (14.04.2023) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.03இல், அபரபக்க நவமித்திதியில், திருவோண நட்சத்திரத்தின் இரண்டாம் பாதத்தில், சாத்திய நாம யோகத்தில், கரசக் கரணத்தில், கடக லக்கினத்தில், மீன நவாம்சத்தில், சுக்கிரன் கால வோரையில், சாத்விக குணவேளையில் இப்புதிய வருடம் பிறக்கிறது. அன்று

*விடாமுயற்சி மட்டுமே நம் வாழ்க்கையை மாற்றி அமைக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்பகல் 10.03 முதல் பிற்பகல் 06.03 வரை விஸு புண்ணிய காலமாகும். இப்புண்ணிய காலத்தில், யாவரும் விதிப்படி மருத்துநீர் தேய்த்து, சிரசில் கொன்றையிலையும் காலில் புன்கிலையும் வைத்து ஸ்நானம் செய்து வெள்ளை நிறமுள்ள பட்டாடையாயினும் அல்லது வெள்ளைக் கரையில் அமைந்த புதிய பட்டாடையாயினும் தரித்து, முத்து வைரம் இளைத்த ஆபரணம் அணிந்து, சுகந்த சந்தனம் பூசி, நறுமலர் சூடி தத்தம் வீடுகளில் சூரியனுக்குப் பொங்கல் பூஜைகள் செய்து, விக்கினேசுவரர் முதலிய குலதெய்வ வழிபாடு செய்து, இயன்ற தான தர்மங்களியற்றி மாதா பிதா குரு தெய்வ மற்றும் மூத்தோர் விவசாய மேதாவி களைப் போற்றி வணங்கி, அவர்களின் ஆசிபெற்று, உற்றார் நண்பர்களுடன் அளவளாவி, அறுசுவை உணவுடன் கடுகு, எள், புளி, நெல்லிக்கனி இவற்றையும் சேர்த்து அருந்தி, தாம்பூலம் தரித்து, மங்கலப் பொருட்களைத் தரிசித்து, மங்கல வாத்திய ஒலிகளையும், திருமுறைப் பாடல்களையும் உளமாரக் கேட்டு, "சோபகிருது" புதுவருடப் பிறப்பினை, தவமாக வரவேற்போமாக. ஆம் மருத்து நீரில், தாழம்பூ, தாமரைப்பூ, மாதுளம் பூ, துளசி, விஷ்ணு கிராந்தி, சீதேவியார் செங்கழுநீர், வில்வம், அறுகு, பீர்க்கு, பால், கோசலம், கோமயம், கோரோசனை, மஞ்சள் மிளகு, திற்பலி, சுக்கு ஆகியவற்றைச் சுத்த ஜலத்திலே இட்டுக் காய்ச்சி தலையில் வைத்து ஸ்நானம் செய்தால், சங்கிரம தோஷ நிவாரணத்தை, சம்பந்த முடைய தோஷகாரர்கள் பெற்றுய்வர் என்று பஞ்சாங்கம் கூறும்.

சங்கிரம தோஷ நட்சத்திரங்களாக, ரோகிணி, மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் கால்கள், திருவாதிரை, புநர்பூசம் 1ஆம் 2ஆம் 3ஆம் கால்கள், திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் கால்கள் ஆகிய இவற்றில் பிறந்தோர் தவறாது மருத்துநீர் தேய்த்து, ஸ்நானம் செய்து, இயன்ற தான தர்மங்கள் செய்து சங்கிரம தோஷத்தை நிவர்த்தி செய்து கொள்ளமுடியும்.

"சோபகிருது தன்னில் தொல்லுலகெலாம் செழிக்கும்
கோபமகன்று குணம் பெருகும் - சோபனங்கள்
உண்டாகு மாரி ஒழியாமல் பெய்யும் எல்லாம்
உண்டாகும் என்றேயுரை"

இந்த சோபகிருது வருடத்தில் மக்களின் வாழ்வாதாரம் பற்பல சோதனைகளை எதிர்கொண்ட போதிலும், எதிர்காலம் சௌபாக்கியமான சுகவாழ்வு கிட்டும் என யாம் நம்ப இடமுண்டு. பொதுவான ஆதாயம் எனப் பார்க்கின்றபோது, 96 என ஆதாய வரவும், 90 என செலவு விரயமும் உண்டு. சிங்கராசியினர்க்கு 14 ஆதாயமும், 02 விரயம் எனப் பெற்று அதிக லாப பலன்களைப் பெறுவர்.

கைவிஷேஷம் கொடுத்தலாகிய பாரம்பரிய நிகழ்வானது, புதுவருட கொடுக்கல் வாங்குதலை சுபநேரத்தில் ஆரம்பித்தலாகும். புதுவருடம் பிறந்த அடுத்த நாளாகிய சனிக்கிழமை காலை 7.52 முதல் 9.00 மணிவரையுள்ள காலம் கைவிசேஷத்துக்குரிய காலமாகும். வெற்றிலையிலே மஞ்சள்கட்டி, நெல்லு, பாக்கு, பழம், நாணயம், தாள்கள், பூக்கள், திருநீறு, சந்தன வாலாயமோடு காசினைப் பரிமாறுவர். இதன் மூலம் சோபனங்கள் மலிந்தோங்கட்டும். மேலும் சுபமுகூர்த்த வேளையில் சகல கருமங்களையும் ஆரம்பித்து, புதுவருட அனுகூலங்களை

*மணிக்கணக்கில் பேசுவதைவிட குறைந்த அளவு காரியங்களை செய்வது மேல்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரமாக்குவர். போர்த்தேங்காய் அடித்தல் என்பது புதுவருட வீர விசித்திர விளையாட்டாகும். சென்றகாலம் எமக்களித்த அனுபவங்கள் மூலமாக நாம் வென்று வாழ இன்றைய புதுவருட வாழ்வினை சாதனைகளாக்குவோம்.

ஒவ்வொரு சதமும், ஒவ்வொரு சொட்டுநீரும், ஒவ்வொரு சோற்று அன்னமும், ஒவ்வொரு மனிதனும், ஒவ்வொரு குழந்தையும் தவப்பேறு எனக்கருதி சோபகிருது ஆண்டினை வரமாக்கு வோம். வாழ்த்துவோம்.

ஒவ்வொரு இதயங்களிலும் காம குரோத வக்கிர வறட்டு சிந்தனைகளை வளரவிடாது, தூய ஆன்மீகப் பரிமாணங்களை கட்டியெழுப்பவே கங்கணம் கட்டிப் பிறந்து வருவாயாக.

ஒவ்வொருவரும் அன்னியோன்யமாகவும், சகோதரத்துவமாகவும், கடமையில் அர்ப்பணிப் பாளராகவும், பொறுப்புக் கூறுபவராகவும், ஊழல் அற்றவராகவும், பஞ்சமா பாதகங்களை வெறுப்பவராகவும், உணவு, உடை, உறையுள் இல்லாது தவித்திருப்போருக்கு உதவுபவராகவும், அறம் செய்ய விரும்புவராகவும் என்றும் எப்போதும் எங்குமே மிளிர்வதற்கு சோபகிருது வருஷம், வேண்டத்தக்கது அறிந்து இனிதே பிறக்கின்றது. நாமும் வரவேற்போமாக!

மண்ணில் நல்லவண்ணம் யாவரும்
மனம் எண்ணியபடி வாழ
மாதவமோடு மனிதம் பூத்திடுமாறு
மனதுக்கு இசைந்து வா!
விண்ணிலே தேவர்களும் வாழ்த்திடவே
வேண்டும் வரங்கள் கொண்டுவா,
வேதம் நான்கினும் மெய்ப் பொருளாகவே
வித்தகஞானம் கொண்டு வா!

வான்முகில் வழாது பெய்யவும், மலிவளம் சுரக்கவும், மன்னன் கோன்முறை அரசு செய்யவும், குறைவிலாது உயிர்கள் வாழவும், நான்மறை அறங்கள் ஓங்கவும், நற்றமிழ் வேள்வி மல்கவும், மேன்மைகொள் மனுநீதி விளங்கவும் "சோபகிருது" என்னும் புதுவருடப் பூமகள் புண்ணியம் பூத்துக் குலுங்க பொலிவோடு பிறந்து வாராய்!

## குருபூஜை தினங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| *மே* | *14* | *சித் 31* | *ஞாயிறு* | *திருநாவுக்கரசர்* |
| *மே* | *25* | *வை 11* | *வியாழன்* | *நமிநந்தியடிகள், சேக்கிழார்* |
| *யூன்* | *05* | *வை 22* | *திங்கள்* | *திருஞானசம்பந்தர் திருநீலகண்ட யாழ்ப்பாணர்* |
| *யூன்* | *23* | *ஆனி 08* | *வெள்ளி* | *மாணிக்கவாசகர்* |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனுடன் நேரில் தொடர்புகொண்ட இறையருட் செல்வர்கள் வரிசையில் கச்சியப்ப சிவாச்சாரியார்

– *திரு மூ. சிவலிங்கம்* அவர்கள் –

காஞ்சி மாநகரின் இயற்கையாக அமைந்த பல வளங்களும் ஆலயங்களின் சிறப்பான அருள்பாலிப்பும் வேறெங்கும் காணமுடியாத சமய, சமூக, கலை கலாசார மரபும் அற்புதமானது. இப்புனித பூமியில் 14ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கந்தகோட்டத்துப் பரம்பரை அர்ச்சகரும் ஆதிசைவ குலத்தவருமான காளத்தியப்ப சிவாச்சாரியார் தம்பதியினர் பெரும் பேறு பெற்றவர்கள். இவர்களின் முன்னாள் நற்றவப் பயனாக முருகப்பெருமானின் அன்பிற்குரியவராக அவதரித்தவர் கச்சியப்ப சிவாச்சாரியார் ஆவார். இவர் பெற்றோரின் அரவணைப்பில் வளர்ந்து உரிய காலத்தில் பெற்றோரால் சமயச் சடங்குகள் செய்யப் பெற்றார். பெற்றோரின் நெறிப்படுத்தலில் நற்கல்வியும் நற்கலைகளும் நல்லொழுக்கமும் நிறைந்த முருக பக்தியும் மிக்கவர்.

இவர் தமது குலத் தொழிலுக்கேற்ப வடமொழியையும் கற்று வடமொழியுடன் தென்மொழியிலும் நல்ல திறமையும் பாண்டித்தியமும் பெற்றவர். வடமொழியிலுள்ள நல்ல சிறப்புக்களைத் தென்மொழியில் யாவரும் அறியும் வண்ணம் பணி செய்தவர். இவர் தந்தையாருடன் இணைந்து கந்தகோட்டத்து முருகப்பெருமானை உள்ளன்போடு பூசித்து வந்தார். இதனால் இவர் முருகப் பெருமானால் ஆசீர்வதிக்கப்பெற்றார்.

இவரது வாழ்வில் சைவ உலகெங்கும் துலங்க இவரின் அரிய சேவை அமைய வேண்டுமெனக் கந்தகோட்டத்து முருகப்பெருமான் சித்தங்கொண்டார். ஒரு புனிதமான கால இரவு வேளை முருகப்பெருமான் இவரின் கனவிற் தோன்றினார். "தமது பக்தர்கள் கற்றுணரும் வண்ணம் தமது கதைகளடங்கிய நூலை "கந்தபுராணம்" என எழுதுமாறு கூறியவர் "திகட சக்கரம்" என்று அடி எடுத்துக் கூறியதும் மறைந்தருளினார். அதிகாலையிற் துயிலெழுந்த கச்சியப்பர் தமது கனவை எண்ணிப் பரவசமடைந்தார். முருகன் தன்னிடம் நேரில் வந்து இட்ட அன்புக் கட்டளையை எண்ணிப் பூரித்தவர் தம் பணியை நிறைவேற்றச் சித்தங் கொண்டார்.

ஒரு சுப தினத்தில் தமது குல ஆசாரப்படி எல்லாப் பணிகளையும் செய்தார். கந்த கோட்டத்து முருகப் பெருமானின் ஆலயஞ் சென்று பெருமானை நன்கு வழிபட்டார். பணி செய்வதற்காக முருகனின் சந்நிதியில் அமைதியான சூழலில் உள்ளமது முருகனை வேண்டி உருக கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர மல்கப் பெருமானால் இட்டபணியை ஆரம்பித்தார். ஒரு நாளில் நூறு பாடல்களைப் பாடி முடிப்பது என்னும் திடசங்கற்பத்தை நிலை நிறுத்தினார். முருகப்பெருமான் அடியெடுத்துக் கொடுத்த "திகடசக்கரம்" என்ற தொடரில் முதலில் ஆரம்பித்தார். முருகனின் பேரருளும் சிவாச்சாரியாரின் முருக பக்தியும் மேலோங்க முதல் நாளில் நூறு பாடல்களைச் சொற்சுவை, பொருட்சுவை ததும்ப முருகனின் பக்திவயலில்

*ஒரு நூலகம் திறக்கப்படும்போது ஆயிரம் சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைந்த அறுவடையான நூறு பாடல்கள் கொண்ட ஏட்டுச் சுவடிகளை ஒன்றாகக் கட்டி முருகப்பெருமானின் ஆலயக் கருவறை முன்பாக ஒப்படைத்தார்.

மறுநாட்காலை வந்து பார்த்தபோது முருகப்பெருமானால் வாசிக்கப்பட்டதால் ஒரு சில திருத்தங்கள் செய்யப்பட்டிருந்ததை அறிந்தார். பேருவகையுடன் தம் மெய்சிலிர்ப்ப முருகனே தம் பணியை ஏற்றதாகப் பெருமிதமடைந்தார். இதே சிந்தனையில் தினம் நூறு பாடல்களை எழுதி வழமைபோல முருகனின் பார்வைக்காக வைத்தார். கந்தபுராணம் முழுவதை யும் ஆறு காண்டங்களாக வகுத்துள்ளார். மொத்தமாக 10345 செய்யுள்களால் எழுதப்பட்ட தாகும்.

முருகப் பெருமானால் ஏற்கப்பட்ட பெருமையுடன் கந்தபுராணம் என்னும் நூலைப் பாவலரும் நாவலரும் புலவர் பெருமக்களும் கூடியிருக்கும் மகாசபையில் அரங்கேற்றஞ் செய்ய கச்சியப்ப சிவாச்சாரியார் சித்தங் கொண்டார். தமது தூய பணியை நன்கு ஆராய்ந்து ஆசிகூறி அரங்கேற்ற ஒரு சுபவேளை குறித்து தொண்டை மண்டலத்திலுள்ள புலவர்களை எல்லாம் கந்தகோட்டத்து முருகன் ஆலயத்திற்கு வந்து கூடி அரங்கேற்றுமாறு அழைப்பு விடுத்திருந்தார். யாவரும் தவறாது பெருந்திரளாக வந்து அவையைச் சிறப்பித்தனர்.

அன்று கச்சியப்ப சிவாச்சாரியார் முருகனை வழிபட்டுத் தமது இதயக் கமலத்திலிருத்தி கந்தபுராண நூலை முறைப்படி பூசித்தார். முதற் செய்யுளை வாசித்து அதன் முதல் வரி யான “திகடசக்கரச் செம்முகம் ஐந்துளான்” என்னும் சொற்தொடருக்கு விளக்கவுரை செய்தார். அச்சமயம் சபையிலிருந்த பல புலவர்கள் எழுந்து கச்சியப்பரை இடைமறித்து திகள் சக்கரம் என்ற சொற்கள் “திகட சக்கரம்” என்று புணர்வதற்குரிய விதி யாது? இப்புணர்ச்சிபற்றித் தொல்காப்பியம் போன்ற நூல்களிலும் காணப்படவில்லை என வாதிட்டனர்.

அச்சமயம் வாதிட்டவர்களில் முதன்மையான புலவரை நோக்கிய கச்சியப்பர் புலவர் பெருமானே “திகடசக்கரம்” என்னும் பதத்தை முருகப்பெருமானே கந்தபுராணத்தை எழுதுமாறு அடியெடுத்துக் கொடுத்தார். அவரின் சொற்களை ஏற்கலாமே என்றார். இதைக் கேட்டதும் வாதாடிய புலவர் இது முருகப்பெருமானின் வாக்காக இருந்தால் முருகப்பெருமானே நேரில் வந்து விளக்கம் தரட்டும் அல்லது நீரே இதற்குரிய விதியைக் கூறும். நூலை அரங்கேற விடமாட்டோம் என்றார். இத்துடன் சபை கலைந்தது.

மனவேதனையடைந்த கச்சியப்பர் முருகனின் முன் கவலையுடன் வணங்கியதும் பெருமானே நீர் கொடுத்த தொடருக்கு நீரே நேரில் வந்து விளக்கம் கூறவேண்டும். இல்லையேல் உன்னடியில் எனது உயிரை மாய்ப்பேன் என்று கூறி அழுது புலம்பினார். கவலையாலும் அசதியாலும் அழுத கச்சியப்பர் அவ்விடத்திலேயே உறங்கிவிட்டார். அவரின் கனவிற் தோன்றிய முருகப்பெருமான் புலவரே! நாளையும் சபையைக் கூட்டும் சோழநாட்டுப் புலவரொருவர் அதற்குரிய நூலுடன் வந்து விதியைக் கூறுவார் என்று கூறியதும் முருகப்பெருமான் மறைந் தருளினார். மறுநாட்காலை கச்சியப்பர் நூலுக்குரிய விதியைக் கூறுவதாகவும் யாவரையும் சபையிற் கூடுமாறும் யாவருக்கும் அழைப்பு விடுத்தார். குறிப்பிட்டபடி சபை கூடியது. புலவர்களின் நடுவே இளமைக் கோலத்துடன் புதிய புலவரொருவர் கையில் புத்தகத்துடன் காட்சி தந்தார்.

*அன்பின் வலிமை வெறுப்பின் வலிமையைவிட மிகப்பெரியது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் நாள் கச்சியப்பரை இடைமறித்த முதிய புலவர் கச்சியப்பரை நோக்கி முதலில் நேற்றுக் கூறியதற்குரிய விதியைக் கூறி விளக்கமளிக்குமாறு கேட்டார். அச்சமயம் சபையிலிருந்த புதிய புலவர் எழுந்து நாம் சோழநாட்டினோம். எம்மிடமுள்ள சுவடி வீரசோழியம் என்னும் இலக்கண நூலாகும். இதனை நீவிரும் அறிவீர். இந்த நூலில் சந்திப் படலத்தின் 18ஆம் பாடலில் ழகரமும் கூடி டகரமாவதற்கு விதி கூறுகிறது. இந்த விதியை நீவிர் அறியீரோ என்றார்.

அப்போது சபையிலிருந்த பல புலவர்கள் "ஆம்.... ஆம்..." வீரசோழியமும் அறிவோம். இவ்விதியையும் அறிவோம். இதுபற்றிக் கூற எமக்கு நினைவெளாதிருந்தமை பெரு வியப்பாகும். அச்சமயம் விளக்கம் தந்த புதிய புலவர் மறைந்தருளினார். சபையில் வந்து விளக்கமளித்தவர் முருகப்பெருமானே என வியந்து கச்சியப்ப சிவாச்சாரியாரைப் பாராட்டினர். இடைமறித்த முதுபுலவர் கச்சியப்பர் முன் வந்து வீழ்ந்து வணங்கினார். எழுந்து சுவாமி தங்கள் பெருமையை அறியாது அரங்கேற்றத்தை இடைமறித்த என்னை மன்னித்தருள வேண்டும் எனப் பணிந்து கூறினார். இதனால் மனமுருகிய கச்சியப்பர் அன்பரே நான் உங்களை மன்னிப்பதாவது உங்களாலன்றோ முருகப் பெருமானின் திருவருள் உலகிற்குத் தெரியவந்தது என அன்பு பாராட்டினார். பின்னர் தொண்டை மண்டலத்திலுள்ள 24 கோட்டங்களிலும் மக்கள் கூடி கச்சியப்ப சிவாச்சாரியாரையும் அவரால் எழுதப்பட்டதும் முருகப்பெருமானால் விளக்கம் தரப்பட்டதுமான கந்தபுராணச் சுவடிகளையும் பல்லக்கிலேற்றி மண்டலம் முழுவதும் பவனி வந்து பெரு வரவேற்புகளும் அளித்தனர்.

பின்னர் கச்சியப்பர் தமது முதல் மாணாக்கனான ஞானோதயர் முதலானோருக்குக் கந்தபுராணம் என்னும் நூலை அடியொற்றிப் போதித்தார். அவர்கள் இதனைப் பல பகுதிகளாக எழுதச் செய்தார். மாணவர்களும் இந்த நூலின் பெருமைகளை நன்கறிந்து பாரெங்கும் கந்த புராண தத்துவமும் கந்தபுராண கலாசாரமும் மரபு வழியாக இன்று வளர பிரகாசிக்க உதவினர். முருகப்பெருமானின் திருவருள் கச்சியப்ப சிவாச்சாரியாரின் அரிய பணியை முருக பக்தர்களால் உணரமுடிகிறது. இப்பெரும் பணியாற்றிய கச்சியப்ப சிவாச்சாரியார் மாணவர்களுக்கு உபதேசித்த பின் நிறைந்த முருக பக்தியுடன் முருகனடி சேர்ந்தார்.

கச்சியப்ப சிவாச்சாரியாரின் முருக பக்தியால் விளைந்த கந்தபுராணம் சிறந்த காவியமாக அமைந்தது. இதன் பொருளை நன்குணர்ந்த யாவரும் ஆசார பக்தியுடன் முரு கனின் பேரருளை வியந்து இதனை வழுவாது பின்பற்றினர். கந்தபுராணம் பக்தி மிகுந்து ஒழுக்கம் பண்பாடு புதிய கலாசாரமாக அமைந்துள்ளது. இந்தியாவில் முருக பக்தர்களால் போற்றப்படும் கந்தபுராண கலாசாரம் பாரெங்கும் பரந்து அறியப்படுவது போற்றத்தக்கது. இதன் பேறாக யாழ்ப்பாணத்தில் அவதரித்த ஆறுமுக நாவலர் பெருமானின் பெருமுயற்சியால் கந்தபுராணம் இலங்கையில் யாழ்ப்பாணத்தில் சிறப்புடன் பரவியது.

யாழ்ப்பாணத்தில் கந்தபுராணபடனஞ் செய்யும்போது ஆண்களைவிட அக்காலத்துப் பெண்களே அதன் சொற்சுவை பொருட்சுவை அறிந்து கந்தபுராணம் என்னும் நூல் வழியான கலாசாரம் வளர உதவினர். இன்று யாழ் மண்ணில் முருக வழிபாடும் கந்தபுராண கலாசாரமும் தூய பண்பும் எம் மண்ணில் பிரகாசிப்பது முருகப்பெருமானின் பேரருளேயாகும்.

*தலையிலிருந்து கால் வரை ஒவ்வொரு நரம்பிலும் செயல் துடிக்க வேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயங்களின் சமாச்சாரம்

– திரு முருகுப்பிள்ளை செல்லத்தம்பி அவர்கள் –

ஆண்டவன் உலகத்தைப் படைத்தான். உயிர் இனங்களை சிருஷ்டித்தான். உலகம் உய்திபெற வேண்டும். உறுதி பெறவேண்டும். நீடு வாழ வேண்டும். அதற்கு முதற் கண்ணாக வேண்டியது மனிதவர்க்கமே. இந்த மனிதவர்க்கமானது மண்ணில் நல்லவண்ணம் வாழ வழி காட்டுவது யார்? அதை எப்படி பெற்றுக்கொள்ள வேண்டும். அதாவது அவனருளாலே அவன்தாள் வணங்கி அதைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அவன் அருளாலே அவன்தாள் வணங்கி ஆக்கபூர்வமான வாழ்வைப்பெற்று மீண்டும் தன்னடி சேரவேண்டும் என்பதே ஆண்டவனின் அர்த்தம் உள்ள படைப்பு. ஆக்கபூர்வமான வாழ்வைப் பெற்றுக்கொள்ள அத்தியாவசியமான வழிமுறைகள் தேவை அல்லவா? அந்த வழிமுறைகள்தான் என்ன? அதனையே சமயங்கள் என்கின்றோம்.

சமயம் என்பது வாழ்வதற்கு தேவையான இலக்குகளை, இயல்புகளைப் பெற்றுக் கொள்வதற்கு கட்டுக்கோப்பான வழிமுறைகளை ஒழுங்கு நிரலில் நெறிப்படுத்தி அதன் பாதையூடாகப் பயணித்து ஆண்டவனை தேடுவதே நோக்கமாகக் கொண்டுள்ளது. இதற்காகவே தான் பலதரப்பட்ட சமயங்கள் தோற்றம் பெற்றுள்ளது. இவை அனைத்தும் ஆண்டவனைத் தேடும் கரிசனைகளையே உள்நோக்கமாகவும் உறுதிப்பாடாகவும் கொண்டெழுந்தன. இதனடிப் படையில் எந்தவிதமான மாறுபாடுகளோ வேறுபாடுகளோ கிடையாது. ஆனால் கடந்து நடந்து வந்த மானிட வரலாற்றை உற்றுநோக்குவோம். ஆனால் வேற்றுமைகள் வித்தியாசங்கள் இருக்கத்தான் செய்தன. இதற்குத்தான் காரணம் என்ன? ஒவ்வொரு சமயம் சார்ந்தோரும் தங்கள் தங்கள் சமயங்களே சிறந்தது, மேண்மையானது என்று கூறுகிறார்கள். வாதாடுகிறார்கள். சவால் விடுகிறார்கள். ஆண்டவன் ஒருவன் இருக்கின்றான் என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்கிறார்கள். ஆனால் அந்த ஆண்டவனை அடையும் பாதைகளில் (சமயங்களில்) ஏன் இந்தப் பிரச்சினைகள், பிணக்குகள் ஏற்படுகின்றன.

உதாரணமாக இரு நபர்கள் தங்களுக்குள் ஒரு தகராறு காரணமாக சண்டை போடு கிறார்கள். தகராறு தீரவில்லை. இதற்காக பொதுவானவர் ஒருவர் பிரச்சினையை தீர்ப்பதற்காக தலையிட்டு விசாரிக்கும்போது இருவருமே தங்களில் ஒரு பிழைகூட இல்லை. தாங்கள் எல்லாம் சரியாகத்தான் செயற்படுகிறோம் என்று கூறுகிறார்கள். இதில் ஒருவர்கூட தாம் சரியாகவும் நீதியாகவும்தான் செயற்படுகிறோம் என்றால் அது மற்றவருக்கும் சரியாகத்தானே இருக்கும். இதற்குள் ஏன் பிரிவினை வாதம். இந்தவகையில் பிரச்சினை தீர்ந்தபாடில்லை. இதற்கு நீதித் துறையே தீர்ப்பு வழங்கவேண்டும்.

இதுபோன்றதே ஒவ்வொரு சமயங்களும் தாங்கள் ஒரு கட்சி, ஒரு அணி என்று ஒன்றுகூடி தங்களுக்கு பாதகம் அற்ற வகையில் நேர்காணலை உருவாக்கி இதுதான் எங்கள் கட்சியின் கோட்பாடு, கொள்கை எனப் பிரகடனப்படுத்தி ஆலயம் அமைத்து வழிபாடுகள் ஆற்றி வருகிறார்கள். சமயம் என்பது சமபங்கு கொண்டவை. சமாச்சாரம் நிறைந்தவை. இதில் ஏற்றத்தாழ்வு ஒன்றும் இருக்கப்போவதில்லை. ஆன்மீகம் தழைத்தோங்கி இறையாண்மை

*நீண்ட நேரம் ஓடிவந்தால் அதிக தூரம் தாண்டமுடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைகொண்டு நேர்மை, அன்பு, நன்றி, கருணை, ஒழுக்கம் நீக்கமற நிறைந்த குணம்குறிகள் இம்மியளவும் பிசகாமல் மனித விழுமியங்களை வென்றெடுக்கும் திறமை வலுப்பெற வேண்டும். அதற்கேற்ற அனுபவம் வாய்ந்தோர்கள் அறிவாளிகள், அருளாளர்கள் தோன்றி சமயத்தை வளர்த்து வரவேண்டும். அப்போதுதான் எந்தச் சமயமும் வல்லாதிக்கம் பெற்று மேன்மையாக விளங்கும்.

உலகிலே நிலவிவரும் சமயங்களுள் சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சைவசமயம் ஆதியும் அந்தமும் இல்லாதது. அது தோன்றிய காலமோ தோற்றுவிக்கப்பட்ட நபரோபற்றி எந்த வரலாறும் இல்லை. இது தனது நேர்மையான நெறி ஆண்மையினால் செழிப்புற்று இன்றுவரை வளர்ந்து வருகின்றது. சமயங்கள் எல்லாம் சமாச்சாரம் கொண்டவை என்று பல்பொருள் நோக்கங்களை தன்னகத்தே கொண்டு திகழ்கின்றது. இச்சமயம் பிற சமயத்தவரால் தேய்ந்துவிடாமல் அழிந்துவிடாமல் இன்றும் புகழுடன் நிலைப்பதற்கு நாயன்மார் களும் அருளாளர்களும் முக்கிய காரணமாக இருந்துள்ளார்கள். காலத்தால் முந்தியது. காலம் எனக்கொரு பாட்டெழுதும். காற்று வந்து இசையமைக்கும் என்று காலத்தால் முந்தியதென்று சைவசமயம் சிறந்து விளங்குவதில்லை. முடியுமானால் இன்றும் சிறந்த நோக்கோடு ஒரு சமயம் உருவாகி பெரும் பயன் உடையதாக விளங்கலாம். இதற்கு அமைவாக முந்திய நூற்றாண்டுகளில் சமணர்கள் தங்கள் சமயத்தை நிலைநாட்டுவதற்காக சைவ சமய நாயன்மார் களுடன் போட்டியிட்டு தோல்வி கண்டதும் இலங்கை அரசனும் மகளும் புத்தபிக்குகளும் தில்லை சிதம்பரத்தில் வாதம் புரிந்து தோல்விக்குமேல் தோல்வி அடைந்தனர் என்றும் சமய வரலாறுகள் சான்று பகர்கின்றன. நற்பண்பும் நற்பேறும் பொலிந்து விளங்கிய தூய்மையான சைவ சமயத்தை துச்சமாக மதித்து அழித்தொழிக்க வந்த பிறமதத்தவரை மடக்கி மண்டியிட வைத்து பாதகத்தை தீர்த்துவைத்தான் இறைவன். இதையே மறுசமயங்கள் மாள வேதமும் செய்தாய் போற்றி பிஞ்ஞகா போற்றி யான் செய் பாதகம் அனைத்தும் தீர்க்கும் பராபரா போற்றி என்று அருளாளரால் போற்றப்பட்டான் இறைவன்.

ஆறு இல்லா ஊருக்கு அழகு பாழ். ஆலயம் இல்லா ஊருக்கு அருள் வடிவம் பாழ். கடலில் இருந்து உருவாகி ஊர் உலகை உயிர் மூச்சாய் திகழவைத்து செழிப்பாக்க மீண்டும் கடலின் மடியிலே சங்கமம் ஆகும் ஆறுகள்போல ஆண்டவன் அடியில் உருவாகும் ஆன்மீகநெறி கொண்ட சமயங்கள் அகிலத்தையே வாழ்விற்கும் அந்தரங்கப் பொருளாகி மீண்டும் அவனிடத் திற்தான் சங்கமிக்கின்றன. தூய சம வாழ்விற்கு குந்தகம் இல்லாமல் தூய்மையான சமாச்சாரத் தையே நிலையாகக் கொண்டுள்ளனவே எல்லாச் சமயங்களும்.

ஒருவன் ஒருத்தியை நினைந்துவிட்டால் அந்த உறவுக்கு பெயர் என்ன காதல். காதல் என்ற ஒன்று இல்லையானால் உலகமே இல்லை. உலக ஓட்டத்திற்கு முன்னுதாரணமாக திகழ்வது காதல். முக்கியமானதும் முழுமையானதுமான இந்தக் காதல், ஒருவன் ஒருத்தியைக் கண்டபோது, கண்ணுற்றபோது பொது அடிப்படையில், பொதுஇயல்பு நிலையில் உருவாகும்போது சமயம் என்ற ஒன்று எங்கே ஒழிந்துகொள்கின்றது. அத்தருணம் நினைவில்கூட நின்றொளிருமா? ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற தாரக மந்திரத்தில் சிறு மாற்றம் கூட மணம் வீசுமா? எனவேதான் மனிதன் கடைப்பிடித்து வாழும் சமயங்களின் சமாச்சாரத்தை வலுப்படுத்தவே

*மனிதன் தோல்வியின்மூலமே மேலும் புத்திசாலி ஆகின்றான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காதலுக்கு ஜாதி இல்லை மதம் இல்லையே
கவிகள் பேசும் வார்த்தையிலே பேதம் இல்லையே"
பாடி வைத்தான் கவியரசு கண்ணதாசன்.

## வில்வத்தின் சிறப்புகள்

வில்வமரத்தில் இலட்சுமி வாசம் செய்கிறாள். ஒரு வில்வதளம் இலட்சம் ஸ்வன (தங்க) புஷ்பத்திற்கு சமமாகும். வில்வத்தின் மூன்று தளங்கள், ஸ்தவம், ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்களைக் குறிக்கிறது. மற்றது வில்வத்தின் மூன்று தளங்களும் இச்சை, ஞானம், கிரியை என்ற மூன்று சக்திகளின் வடிவம். வில்வதளத்தில் திருமகள் வாழ்கிறாள். எனவே வில்வ மரத்திற்கு திருமரம் (திருவிருட்சம்) என்ற பெயருமுண்டு. வில்வத்தின் பெருமை சாத்திரங்களில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. வில்வத்தின் மூன்று இலைகள் சிவபெருமான் ஏந்தியுள்ள திரிசூலத்தின் வடிவத்தையும் இறைவனின் முக்கண்களையும் காட்டுகிற வடிவில் அமைந்துள்ளது. வில்வத்தில் திருமகள் இருப்பதால் அடியார்கள் செல்வங்களை எல்லாம் இறைவன் திருவடிகளிலே அர்ப்பணித்துவிட்டு அவன் திருவருளை மட்டுமே வேண்டுகின்ற நிலையை வில்வ இலை அர்ச்சனை காட்டுகின்றது.

நாங்கள் சிவன் கோவிலில் அர்ச்சனை செய்யும் வில்வமும் வில்வத்தில் ஊறிவந்த அபிஷேக நீரும் எத்தனை நோய் தீர்க்கும் மருந்து என விஞ்ஞானிகளும் நம் சித்தர்களும் தெரிந்த உண்மை. எவன் ஒருவன் ஆத்மார்த்தமாக வில்வமரத்தினை பூஜிக்கிறானோ அவன் எல்லாப் பாதகங்களிலிருந்து விடுவிக்கப்பட்டவனாய் சிவலோகத்தில் கொண்டாடப்படுகிறான். ஒரு வேடனை புலி ஒன்று காட்டில் துரத்திச் சென்றது. உயிர்பிழைக்க வேண்டி ஓடிப்போய் ஒரு மரத்தில் ஏறிக்கொண்டான். அந்தமரம் வில்வமரம். இரவு முழுவதும் அவன் உறங்கவே இல்லை. இராப்பொழுதைப் போக்கவேண்டி அம் மரத்து இலையை ஒவ்வொன்றாய் கிள்ளி கீழே போட்டுக்கொண்டிருந்தான். புலி இருந்த இடத்திலே ஒரு சிவலிங்கம் காட்சி அளித்தது. வேடன் கிள்ளி எறிந்த வில்வ பத்திரம் எல்லாம் சிவலிங்க அர்ச்சனையாக முடிந்தது. அவன் முத்தி பெற்றான். இதிலிருந்து வில்வத்தின் சிறப்பை அறியலாம்.

மாதப்பிறப்பு, சோமவாரம், பௌர்ணமி, சதுர்த்தி, அட்டமி, நவமி ஆகிய நாட்களில் வில்வம் பறிக்கக் கூடாது. வில்வ பத்திரத்தை பார்ப்பதாலும், தொடுவதாலும், நமஸ்கரிப்பதாலும் இரவு, பகலில் செய்யும் பாவம் அகலும் என்பது நிச்சயம். காய்ந்தாலும், பழையதானாலும் பூச்சிக்கூடு, புழுவில்லாததான வில்வங்களால் யார் சிவலிங்கத்தை அர்ச்சிக்கின்றார்களோ அவர்கள் சிவலோகத்தில் பூஜிக்கப்படுகிறார்கள்.

உண்மையான பக்திக்கும் அன்பிற்கும் ஈடு இணை எதுவுமில்லை. ஆனபடியால் மனம் எனும் சிந்தனைத்தேரை தெய்வீகம் எனும் கடிவாளத்தினால் கட்டுப்படுத்தி வில்வ அர்ச்சனை செய்து சிவபெருமானின் அருளைப் பெறுவோம். வில்வத்தை சிவனுக்கு பக்தியுடன் அளித்தால் பால்ய, கௌமார, யௌவன எனும் மூன்று அவஸ்தைகளைத் தவிர கிழத்தன்மையை கொடுக்காததாயும் சென்ற ஜென்மம், நடக்கும் ஜென்மம், நடக்கப்போகும் ஜென்மம் ஆகிய மூன்று ஜென்மங்களின் பாவங்களைப் போக்கடிக்கக் கூடியதும் ஆயுளைக் கொடுக்கக் கூடியதாயும் உள்ளது.

கங்கையைத் தலையில் வைத்திருப்பவரும், சிவாகம சுந்தரியின் மணாளரும், ஸர்ப்பங்களை அணியாக கொண்டவரும் கைலாசம், மேரு மந்தரம் முதலிய மலைகளுக்கு தலைவருமான சிவனை திருதல வில்வத்தை அளித்து வணங்கி இம் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோம்.

-திருமதி பொ. திலகவதி-

*வாழ்வில் முன்னேற முதலில் தன்னம்பிக்கை அவசியம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமூலர் தவமொழி

– திரு ஆ.தா.இ. ஜெயபாலன் அவர்கள் – (தொடர்ச்சி...

இறைவனுடைய பேரின்பத்தை நாடி அந்த முயற்சியில் ஈடுபட்டால் படிப்படியாக "நான்" எனும் நினைப்பு நீங்கி எல்லாம் அவனே என்ற தெளிவு உண்டாகிறது. இந்த உணர்வு வலுவடையும்போது, உடம்பு என்ற தசை உணர்ச்சியும் தனிப்பட்ட உயிர் என்ற அகங்கார உணர்ச்சியும் நினைப்பு மறப்பு என்ற மனஉணர்ச்சியும், அனைத்தும் அகன்று தெய்வ ஆனந்த நிலையிலே எல்லாம் ஒன்றுபட்டுவிடுகின்றன. இதுவே அநுபூதி நிலை என்பது. இதைப்பற்றி பாடல்மூலம் சொல்கிறார்.

தானு மழிந்து தனமும் அழிந்தநீடு
ஊனு மழிந்து வுயிரு மழிந்துடன்

(தானும் அழிந்து- தான் என்கிற ஆணவம் அழிந்து, தனமும் அழிந்து- தன்னுடைய என்கிற பொருளைப்பற்றி நிற்கிற உணர்ச்சியும் நீங்கி, நீடு பிறவியோடு வந்த ஊனும் அழிந்து- உடலை தான் என்று எண்ணுகிற மாயை நீங்கி உயிரும் அழிந்து- ஆன்மாவை. ஆன்மாவைப் பிணைத்துள்ள தான்வேறு பிறர் வேறு பரமன் வேறு என்ற பேதநிலை அகன்று)

ஊனு மழிந்து வுயிரு மழிந்துடன்
வானு மழிந்து மனமு மழிந்துபின்

(உடன்- இவைகளுடன் வானும் அழிந்து- வானம் முதலிய பஞ்சபூத தோற்றங்கள் அழிந்து, அதாவது சிருஷ்டியும் இறைவனும் வேறு என்கிற குழப்பம் அழிந்து மனம் அழிந்து- இந்திரியங்களை நடாத்தும் அக இந்திரியமான மனம் (அதனில் தோன்றும் சங்கல்பங்கள்) நீங்கி

வானு மழிந்து மனமு மழிந்துபின்
நானு மழிந்தமை நானறி யேனே.

(நானும் அழிந்தமை- இந்த சங்கல்பங்களுடன் அகம் என்பது முற்றிலும் அழிந்து தீர்ந்து போன நிலையை நான் அறியேனே எனது பிரக்ஞை இன்றியே இத்தகையும் நிகழ்ந்துவிட்டன)

இவை எல்லாம் நீங்கியபின், நான் என்கிற தனநிலை தானாகவே அழிந்துபோகும். ஆகவே இந்த நிகழ்ச்சியை அனுபவிப்பதற்குரிய ஆளாகிய "நானும்" கரைந்து ஒழிந்து போனபடியால் "பயனிலை" மட்டும் நிகழ்கிறது. ஆனந்திப்பவன் ஈசனே தவிர வேறு யாரும் இல்லை! இதுவே பிரும்மானந்த நிலை என்பது இதைத்தான்.

*தோல்வி துரத்துகிறது என்றால் வெற்றியை நெருங்குகிறாய் என்று அர்த்தம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊன்கெட்டு உயிர் கெட்டு
உணர்வு கெட்டு என்
உள்ளமும் போய்
நான் கெட்ட வாபாடித்
தெள்ளேணம் கொட்டாமோ

என்று துள்ளித் துள்ளி பாடுகிறார் மாணிக்கவாசகரும்.

தானு மழிந்து தனமும் அழிந்தநீடு
ஊனு மழிந்து வுயிரு மழிந்துடன்
வானு மழிந்து மனமு மழிந்துபின்
நானு மழிந்தமை நானறி யேனே.

பரம்பொருளோடு ஆன்மா கலந்துபோய் அந்த இரண்டற்ற ஆனந்தத்திலே திளைக்கும் நிலையை எப்படி வார்த்தைகளால் வெளியிட்டு கூறுவது?

தான் வரை வுற்றபின் ஆரை வரைவது?

(விரைவு- விருப்பம், வேட்கை தான் வரைவு அற்றபின்- உள்ளமானது வேட்கை என்பதை ஒழித்த பின்பு ஆரை வரைவது- யாரை விரும்புவது)

உள்ளம் கடவுள் மயமான பின்பு நினைப்பது என்பது யாரை?

காமனை வென்ற கண்ணாரை யுகப்பது?

(காமனை வென்ற கண்- ஆசைகளை கடந்து வெற்றி கொண்ட கண்கள் ஆரை உகப்பது- யாரைப் பார்த்து மோகிப்பது)

தூமொழி வாசகஞ் சொல்லும் நீரே

(தூமொழி வாசகம்- தெளிவான விடையை சொல்லுமின் நீரே- நீங்கள் சொல்லுங்கள்)

இறைவனை வரித்துக்கொண்டேன் இறைவனையே நினைக்கிறேன். இறைவனையே உகந்து மோகிக்கிறேன். என்றெல்லாம் சொல்லலாம். ஆனால் "நான்" என்பது அற்றபின் இப்படிச் சொல்வதில் அர்த்தமில்லை. ஐம்புலனும் மனமும் இறைவனோடு ஒன்றிவிட்ட பின்பு வரைதல், நினைத்தல், உகத்தல் என்றெல்லாம் சொல்வதில் பொருளில்லை என்கிறார் தவமூலர். அதாவது பேதமற்ற நிலையிலே ஒன்றிவிட்ட ஆனந்த லயமே பாட்டின் கருத்தாகும்.

தான் வரைவற்ற பின் ஆரை வரைவது?
தானவ னானபின் ஆரை நினைவது?
காமனை வென்ற கண்ணாரை யுகப்பது?
தூமொழி வாசகஞ் சொல்லும் நீரே.

(இறைவனுடைய இலக்கணங்களை அப்படி இப்படி என்கின்ற பண்டிதர்களை நோக்கி கேட்கிறார் தவமூலர்.

உரையற்ற தொன்றை உரைசெய்யும் ஊமர்காள்

(உரையற்ற தொன்றை- வர்ணனைக்கு அப்பாற்பட்ட பரம்பொருளை உரை செய்யும்- வர்ணிக்கின்ற ஊமர்கள்- ஊமை மனிதர்களே!)

*ஆசைப்படுவதை மறந்துவிடு. ஆனால் ஆசைப்பட்டதை மறந்துவிடாதே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கணம் கூற முடியாத பொருள் பரம்பொருள். அந்த உரையற்ற பரம்பொருளுக்கு உரை செய்கின்றவர்களை ஊமையர்கள் என்கிறார் தவமுனி. பயனற்ற தொழிலில் ஈடுபடு கின்றவர்களை அப்படிச் செய்யவேண்டாம் என்கிறார். இதுவே ஊமர்காள் என்பதன் கருத்து.

உரையற்ற தொன்றை உரைசெய்யும் ஊமர்காள்
கரையற்ற தொன்றைக் கரைகாண லாகுமோ.

கரையற்று நிற்கின்ற பெரும் வெள்ளத்திற்கு கரைகாண முடியுமோ? முடியாது. பரசிவ வெள்ளம் அப்படிப்பட்டது. எனவே நாம் செய்யவேண்டியது என்ன?

திரையற்ற நீர்போல் சிந்தைதெளி வார்க்குப்
புரையற் றிருந்தான் புரிசடை யோனே.

(புரையற்ற நீர்போல்- அலைகள் இல்லாத தண்ணீர் போல் சிந்தை தெளிவார்க்கு- உள்ளம் தெளிவடைந்தவர்க்கு புரையற்றிருந்தான்- குறைவில்லாமல் நிறைந்து அமர்ந்து கொள்கிறான், புரிசடையோன்- சுருண்ட சடைகளையுடைய சிவபெருமான்)

ஆராய்ச்சிகளை விட்டொழித்து தெய்வ சிந்தனையிலே மனம் ஒன்றியவாறு சலனமற்று இருந்தால் அந்த சித்தத்துக்குள்ளே பூரணமாக வந்து அமர்ந்து கொள்கிறான். எம்பெருமான்! எனவே நாம் செய்யவேண்டியது என்ன? உள்ளமானது ஆசாபாசங்களில் அலையாமல் திரையற்ற தண்ணீரபோலத் தெளிவடைய வேண்டும் என்பது திருமூலரின் உபதேசமாகும்.

உரையற்ற தொன்றை உரைசெய் ஊமர்காள்
கரையற்ற தொன்றைக் கரைகாண லாகுமோ
திரையற்ற நீர்போல் சிந்தைதெளி வார்க்குப்
புரையற் றிருந்தான் புரிசடை யோனே.

தெய்வத்தோடு ஐம்புலன்களும் மருவி நின்று அனுபவிக்கின்ற பெரியோர்களை "அனைந்தோர்" என்று சொல்வதுண்டு. திருமூலருடைய திருமந்திர நூலில் "அனைந்தோர் தன்மை" என்ற பகுதியில் உள்ள பாடல்கள் ஜீவன் முக்தி நிலையை விளக்கும் அற்புதப் பாடல்கள்.

ஒழிந்தேன் பிறவி உறவென்னும் பாசம்

(ஒழிந்தேன் பிறவி- இறைவனுடைய திருவருள் கிடைத்த பாக்கியத்தினால், இனி இந்த உலகில் பிறந்து இன்பதுன்பங்களை அனுபவிக்க வேண்டிய அவசியமில்லை. பிறவி ஒழிந்தது- உறவென்னும் பாசம் கழிந்தேன்- மனைவி, மகன், சுற்றத்தார் என்று கருதும் பாசங்களை நீக்கிக் கொண்டேன்.)

ஒழிந்தேன் பிறவி உறவென்னும் பாசம்
கழிந்தேன் கடவுளும் நானுமொன் றானேன்

(கடவுளும் நானும் ஒன்றானேன்- இறைவனோடு ஒன்றிவிட்டேன்)

அவன் வேறு நான் வேறு என்ற பேதமில்லாமல் கடவுளும் நானும் ஒன்றாகிவிட்டோம் என்கிறார் திருமூலர். இறைவனும் நானும் என்ற பன்மைக்கு ஆளானோம் என்று கூறாமல் ஒன்றானேன் என்று ஒருமையில் சொல்கிறார். இது அந்த ஐக்கிய பாவத்தை அர்த்தமாகக்

***துன்பங்களுக்கு இடையில்த்தான் வாய்ப்புகள் ஒளிந்திருக்கின்றன.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுவதோடு, ஈசன் மாறவேண்டியதில்லை. மாறவேண்டியது என்னுடைய மயக்கந்தான். ஆனபடியால் ஒன்றானேன் என்று தன்னை ஒருமையில் கூறுகிறார்.

அழிந்தாங் கினிவரு மாக்கமும் வேண்டேன்

(சார்பு அணைதல்- செழுஞ்சார்பு- இன்பமயமான சார்பு, செழுஞ்சார்புடைய- இன்பத் தோடு வந்து நம்மை அணைத்துக்கொண்டு, நமக்கும் இன்பம் தருகின்ற சிவனைக் கண்டேனே "ஓ" காரம் ஆனந்த இயல்பு)

ஒழிந்தேன் பிறவி உறவென்னும் பாசம்
கழிந்தேன் கடவுளும் நானுமொன் றானேன்
அழிந்தாங் கினிவரு மாக்கமும் வேண்டேன்
செழுஞ்சார் புடைய சிவனைக் கண்டேனே.

(தொடரும்...

## புத்தாண்டே வருக!

ஆழ்துயர் அகன்றே ஓட,
அகமெலாம் மகிழ்வு பொங்க,
சூழ்வினை அகல, நல்ல
சுகம் பல விளைய, எல்லோர்
வாழ்விலும் வளங் கொழிக்க
வையமே இனிதுவக்க
நீள் புகழ் கொண்ட ஆண்டே
நிறைவுடன் வருக! வாழ்க!!

பொய், கொலை, களவு ஓய,
பொலிந்திடச் செல்வம், எங்கும்
தெய்வீக மனங் கமழ
தேன் மழை பொழிய, செந்நெல்
உய்திட உழவர் மாண்பு
உயர்ந்திட உவகை நாங்கள்
எய்திட எழிற் புத்தாண்டே
ஏற்றமாய் வருக! வாழ்க!!

மங்கள விளக்கை ஏற்றி
மனைதொறும் மக்கள் இன்பம்
பொங்கிடப் புதிய ஆடை
புனைந்து கொண்டாடுகின்ற
இங்கித ஆண்டே! எங்கள்
இடர்களெலாம் களைய
இங்கு நீ வருகை தாராய்!
இதயத்தால் வாழ்த்துகின்றோம்!

-கி. குலசேகரன்-

*நீ வெற்றியடைவதை உன்னைத் தவிர வேறு யாராலும் தடுக்கமுடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்ணம் தீட்டுதல் நாலாவது வர்ணம்

– திரு முருகவே பரமநாதன் அவர்கள் –

மேலை நாட்டிலே பயிற்சிப் புத்தகங்களில் அமைந்த மிருகம், பறவை போன்ற கோட்டுச் சித்திரங்களைப் போட்டு வர்ணம் தீட்டும்படி இளம் மாணவர்களைக் கேட்பர். கொப்பியடிப்பதில் வல்ல நம்மவரும் செய்திப் பத்திரிகைகளில் சைவசமயப் பத்திரிகைகளில் பாடப்புத்தகங்களில் தெய்வ, கடவுள் படங்களை ரேகைச் சித்திரமாக வெளியிட்டு வர்ணம் (நிறம்) தீட்டும்படி கேட்கின்றனர். உருவ வணக்கமுள்ள சைவ சமயிகள் இறைவனின் திரு வடிவை வணங்குபவர்கள் இத் தெய்வத் திருக்கோலங்களை மூர்த்தம், திருமேனி அர்ச்சையென்று அழைப்பர். மூர்த்தம், மூர்த்தி, திருமேனி புனிதமானவை. மூர்த்தத்தை உடையவன் மூர்த்தி. அதிவணக்கத்துக்குரிய இவ்வடிவப் படங்கட்கு நிறம் தீட்டுவது, தெய்வ நிந்தனை மட்டுமன்றிச் சமையத்தைக் கொச்சைப்படுத்துவதாகும். வேறெந்த மதத்தினர் யாரேனும் இப்படிச் செய்கின்றனரா. இந்துத்வம், சைவத்வம் பேசுவோர் சிந்திப்பார்களாக. நாட்காட்டிகளை கடவுட்படத்தோடு அடித்து, குப்பைத்தொட்டியிற் தள்ளும் கர்த்தாக்களும், விப்ரரும் படித்திடித்துச் சொன்னாலும் கவனிப்பதில்லை.

சைத்திரிகர்கள் பலவித வர்ணங்களைத் தூரிகைகளாற் தெளித்து, பலவண்ணச் சித்திரங்களைத் தீட்டுவர். அவர்களின் கைவண்ணம் இருந்தவாறு என்னே. பஞ்சவர்ணக் கிளிகள் அழகானவை. பஞ்சவர்ணம் ஐந்து நிறங்கள். மழைத்துமிகளிற் சூரிய கிரணம் பட்டுத் தெறிக்கும்போது நிற இந்திரஜாலம் டால் அடிக்கும். இவ்வண்ணமே மாரிகாலத்தில் நெஞ்சையே அள்ளும் வானவில்லின் வர்ணம். வர்ணம் வருணம் எனவும் எழுதப்படலாம். வர்ணம் நிறம் என்று பொருள்படுவதைப் பார்த்தோம். இதே சொல் நாலாவது வர்ணம் என்று பாவிக்கும்போது சாதியையே குறிக்கும். பகவத்கீதையில், மனுதர்மத்தில் நான்காவது வர்ணம் பேசப்படுகிறது. அவை சத்திரியர், பிராமணர், வைசியர், சூத்திரர்கள் நான்கு வர்ணத்தார். சூத்திரரையே நாலாவது வர்ணம் என்பர். இந்த நாலாவதுக்குள் எத்தனை வர்ணம். காஞ்சிப் பெரியவர் சர்மா (பிராமணியம்) வர்மா (அரசன்) குப்தா (வணிகர்) என்று வகுத்து நாலாவது வர்ணம் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். உணவு போடுபவன் கமக்காரன். இவனே சூத்திரன். வேளாளன் என்போன் விருந்திருக்க உண்ணாதான். தாளாற்றித்தந்த பொருளெல்லாம் வேளாண்மை செய்தற்பொருட்டே. ஏர் முனைக்கு நேர் எதுவுமே இல்லை என்று நம்ம வாழ்விலே பஞ்சமே இல்லை. உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் எனக் கவிதை எழுதினார் பாரதி. தமிழிலே எழுந்த கனதியான தத்துவ ஏடு திருமந்திரம். இதிலே ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற உண்மையை எழுதி வைத்துள்ளார். குலம்- மனித குலம். சத்தியசாயி பாபாவின் திருவாக்கு இஃது.

உலகில் உள்ளது ஒரே மதம்தான் - அதுவே அன்புமதம்.
உலகில் உள்ளது ஒரே மொழிதான் - அதுவே இதயமொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் உள்ளது ஒரே குலம்தான் - அதுவே மனிதகுலம்
உலகில் உள்ளது ஒரே தெய்வம்தான் - அதுவே எங்கும் நிறைந்தது.
-சமயங்களின் ஒருமைப்பாடு.

மனுதர்மமும் கீதையும் குறிப்பிடும் வர்ணாச்சிரமங்களை பொதுமக்கள் ஏற்றுக்கொள்வதே இல்லை இன்று. திருக்குறள் சமுதாயத்தை மையமாக எழுந்தது. அப்பெரு நூலிலே

பிறப் பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப் பொவ்வா
செய் தொழில் வேற்றுமையான் - என வருகிறது.
-குறளோவியம் 972.

"மக்களாய்ப் பிறந்த எல்லோர்க்கும் பிறப்பு ஒரு தன்மைத்ததாகும். ஆனால் அவ்வுயிர்கள் செய்யும் தொழில்களின் உயர்வு தாழ்வு ஆகிய வேறுபாட்டால் சிறப்பியல்புகள் ஒவ்வாதனவாம். இக்கண்ணோட்டத்தில் மனித சமுதாயம் ஒன்றுதான்". அதில் இயற்கையமைவால் ஆண் பெண் இனம்தான் பரம்பரையை ஆக்குகிறது. எனவே மனிதத்தின் ஆண்பால் பெண்பால் இரு பிரிவாம். வள்ளுவரின் பாதையிலே ஒளவையார் சற்றுக்கூர்மையாய் ஒன்று சொன்னார். அவர் சொன்ன நீதி இது.

சாதி இரண்டொழிய வேறில்லைச் சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின் - மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ளபடி. -நல்வழி 2.

பட்டாங்கில் - உண்மை நூலில்.

இதற்குப் பொருள் சொன்ன இலக்கிய கலாநிதி பண்டிதமணியவர்களின் கூற்று வருமாறு.

"சாதி இரண்டொழிய வேறில்லை என்கிறார் ஒளவைப்பிராட்டியார். ஒன்று நீதிச்சாதி மற்றது அநீதிச்சாதி. நமக்கு அறிவு இருக்கிறது; அதனோடுகூட ஆசையும் இருக்கிறது. அறிவு நீதிச்சாதியைச் சேர்ந்தது; தெய்வத்தன்மை வாய்ந்தது. ஆசை அநீதிச்சாதியைச் சேர்ந்தது; அழுக்கோடு கூடியது. ஆசையைச் சுத்தப்படுத்தி, அறிவின் வழிப்படுத்த வேண்டும். ஆசையை அறிவின்வழி நடத்துகிறவர்கள் நீதிச்சாதியை அடைகிறார்கள். அவர்களே சாதிமான்கள்".

பண்டிதமணி சி.க. பாராட்டுவிழா மலர். பக். 96.

ஆக நீதிவழியே தம்மை இட்டுச்சென்றவர் உயர்ந்தவர் என்பது தேற்றம். கொள்ளையடித்த பணத்தைத் தர்மம் செய்பவனல்ல. மணிமொழியார் இறைவனையே நீதியாக்கினார். அவன் வழிநடக்கும் சிவச் சமயத்தினை நீதியாக்கினார் கச்சியப்பர். எல்லப்ப நாவலர் போன்றவர்கள் இந்த உண்மையைப் பண்டிதமணி "சைவம் சிவசம்பந்தமானது. சிவசம்பந்தமுடையவர்கள் சைவர்கள். ஆக சிவசம்பந்தமுடையவர்களே சைவர்கள். சிவசம்பந்தமில்லாதவர்கள் தீண்டத்தகாதவர்கள். யார் தீண்டத்தகாதவர்கள் "சைவத்தொடர்பில்லாதவர்கள் தீண்டத்தகாதவர்" எனக் கூறினார்.

*முயன்று செயல்களை செய்பவனே வாழ்க்கையில் வெற்றி பெறுவான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வண்ணம் ஆழங்காற்படும்போது எம் மதத்திற் தீண்டத்தகாதவர் இல்லையெனலாம். மனோன்மணியம் தந்த சுந்தரம்பிள்ளையவர்கள் மனுநீதியை உரைத்துப் பார்த்துத் திருக்குறளின் மேன்மையை எடுத்துப் பேசினார். "வள்ளுவர் செய் திருக்குறளை மறுவற நன்குணர்ந்தோர்கள் உள்ளுவரோ மனுவாதி யொருகுலத்துக்கு ஒருநீதி" மனோன்மணியம்.

சாதிவியாதி. நிறபேதம் இனபேதம் என்பன மனிதசமுதாயமெங்கும் விரவக் காண்கிறோம். வீதிக்கொரு சாதியும், சாதிக்கொரு வீதியும் இருந்த காலமொன்றிருந்தது. எது எப்படியாயினும் இத்தொற்றால் சைவம், இந்து சமயங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டமை அப்பட்டமான இரகசியம். மாதிரிக்கு அப்பரும், ஆளுடையடிகளுமிதை எடுத்துப் பேசியுள்ளனர்.

சாத்தி ரம்பல பேசும் சழக்கர்காள்
கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்
பாத்தி ரம்சிவம் என்று பணிதிரேல்
மாத்தி ரைக்குள் அருளும்மாற் பேறரே.

-5.60.3.

சாதிகுலம் பிறப்பென்னும் சுழிபட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை அல்லலறுத் தாட்கொண்டு
பேதை குணம் பிறருருவம்யா னெனதென்று உரைமாய்த்துக்
கோதிலமு தானானைக் குலாவுதில்லை கண்டேனே.

-திருவாசகம் 31.5.

சமரச சன்மார்க்கங்கண்ட வள்ளலாரும் இதன்தீமையினை எடுத்துக் கூறியுள்ளார்.

சாதிகுலம் சமயம் எலாம் தவிர்த்தெனை மேல் ஏற்றித்
தனித்ததிரு அமுதளித்த தனித்தலை மைம் பொருளே

-அருட்பா ஆறாந்திருமுறை 104.

சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே
சாத்திரச்சந் தடிகளிலே கோத்திரச் சண்டையிலே
ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகிர்
அலைந்தலைந்து வீணேநீர் அழிதல் அழகல்லவே.

-மேலது 182.

ஏகதேசமாக நோக்கையிலே உலகெங்கும் இதை எதிர்த்துப் போராடி வெற்றி பெற்றுள்ளனர். தலித்தியமென்ற இப்பாதிப்பை இன்றும் ஒழிக்க முஸ்தீபு செய்கின்றனர். தமிழ்நாட்டளவுக்கு நம் மண்ணில் இல்லை. விடுதலைக் கவியான பாரதி இதை வெறுத்து "சாதிகள் இல்லையடி பாப்பா" என்று பாடினார்.

இப்பழியினைத் துடைக்க ஈழமணித்திருநாடு முயன்று விடிவும் கண்டுள்ளது. வெளிநாட்டவரின் ஆட்சிக்குட்பட்ட காலத்திலே சமயமாற்றம் பெரிய அளவில் ஏற்பட்டது. பல சைவாலயங்கள் அகற்றப்பட்டுத் தேவாலயங்கள் எழுந்தன. பல்லாயிரம் பேர் மதம் மாறினர். அவர்கள் மாறிய மதம், மாற்றப்பட்ட மதம் கிறித்தவ கத்தோலிக்க மதங்கள்.

*சுறுசுறுப்புடன் எல்லாவற்றையும் செய்பவனுக்கு எல்லாக் கதவுகளும் திறந்திருக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பான்மை, சிறுபான்மை என்றில்லாமல் மதம் மாறினர். ஆனாற் சிறுபான்மைத் தமிழர் என்றழைக்கப்பட்டவர்களிற் பெரு விழுக்காடு சைவசமயத்தை விட்டு மாறவே இல்லை. அவர்கட்கு ஆலயங்களில் உட்சென்று வழிபாடியற்றும் சுதந்திரம் மறுக்கப்பட்டபோதும், அவர்கள் சைவசமயிகளாய்ச், சிவபக்தர்களாய் இன்றுவரை வாழ்கின்றனர். சாதிமானென்போர் பலர் சைவத்தையும் கைவிட்டு அல்லலுயாவிற்கு மாறிவிட்டனர். தூக்குக்காவடி எடுத்தவர்கள், பறவைக்காவடி எடுத்தோர், அங்கப்பிரதட்டினம் மேற்கொண்டோர், திருவிழா அபிடேகம் செய்தோர், சுவாமி காவியவர்கள், கந்தசஷ்டி விரதம் பிடித்தோர் இப்போ கிறித்தவம் தழுவி பெயரை மாற்றியும் விட்டனர்.

இவர்கள் பற்றுறுதியோடு தம் சமயத்தில் நம்பிக்கையும், பற்றுறுதிகொண்டு சமய அனுட்டானமுள்ளவர்களாய் சென்ம சென்மாந்தரமாகச் சைவ சமயிகளாய் வாழ்ந்துகாட்டுவது நமக்கு முன்மாதிரியாகும். இவர்களைச் சைவம்காத்த சாதிமான்களென அழைக்கலாம்.

நம் உடன்பிறப்புக்கள் எம் சொந்தச் சகோதரங்களின் சாதனையை நாம் போற்றியே ஆகவேண்டும். அவர்கள் பச்சோந்திகளாகவில்லை. அவர்களிலே சிறந்த சமய விசுவாசிகளையும் கல்விவல்லார்களையும் காணமுடிகிறது. போற்றினும் போற்றுதும் சைவம் பேணிய சைவசமயிகளை. இவர்கள் விரதம் பிடிக்கிறார்கள். ஆசாரமாய் வாழ்ந்து காட்டுகின்றனர். அவர்களின் பொன்னார் திருவடிக்கு வணக்கம்.

சொந்தச் சகோதரர்கள் துன்பத்திற் சாதல் கண்டும்
சிந்தை இரங்காரடி - கிளியே
செம்மைமறந் தாரடி.

எல்லோரும் ஓர் இனம் எல்லாரும் ஓர் நிறை
வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால் - அதில்
மானுடர் வேற்றுமை இல்லை. -மகாகவி பாரதி.

---

நாம் அறிந்த விஷயங்களே நமது எண்ணங்கள் ஆகின்றன. அந்த எண்ணங்கள்தான் சொற்களாகவும் நமது வாயிலிருந்து வெளிப்படுகின்றன. அந்தச் சொற்களிற் சில செயல்வடிவம் பெறும்போது அதுவே நமது இயல்பாகவும் மாறி, பின் நமது நடத்தையாகவும் மாறிவிடுகிறது. இந்த நடத்தைதான் விதியாக மாறுகிறது அல்லது மாற்றப்படுகிறது.

நான் அனுபவித்துக்கொண்டிருக்கும் இந்த துன்பம், என்னுடைய சொந்தச் செயல்களாலேயே உருவாக்கப்பட்டிருக்கிறது. நான் எதைப் படைத்தேனோ அதை என்னால் அழிக்கவும் முடியும் என்று சொல். பொறுப்பு முழுவதையும் உன் தோள்மீதே சுமந்துகொள். உனது விதியைப் படைப்பவன் நீயே என்பதைப் புரிந்துகொள். உனக்குத் தேவையான எல்லா வலிமையும் உதவியும் உனக்குள்ளேயே குடிகொண்டிருக்கின்றன.

விதி என்பது நல்லவர்களுக்கு நண்பன், ஞானிகளுக்கு வழிகாட்டி, முட்டாள்களுக்கு கொடுங்கோலன், கெட்டவர்களுக்குப் பகைவன்.

*உழைப்புத்தான் எல்லாச் செல்வங்களுக்கும், மதிப்புகளுக்கும் மூலதனம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி....

# ஆனந்த சாகரம்

– திருமதி சிவனேஸ்வரி பாலகிருஸ்ணன் அவர்கள் –

## கண்கண்ட தெய்வம்

அன்னை கலைவாணி நம் உள்ளத்தில் உறைந்து, உள்ளத்து அழுக்கையெல்லாம் போக்கி, வேண்டுவதெல்லாம் அருள்வதாகக் கூறும் சரஸ்வதி அந்தாதிப் பாடல்களை பக்தி சிரத்தையுடன் உள்ளம் உருக ஓதி அன்னையின் அருள் பெறுவோமாக!

சகலகலாவல்லி மாலையைத் தினம்தோறும் ஓதி வந்தால் கலைமகள் அருள்கடாட்சம் கிட்டும். இயலாதவர்கள் "மண்கண்ட வெண்குடைக்கீழாக" என்ற கடைசிப் பாடலையாவது படிக்க வேண்டும்.

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னரும் என்
பண்கண்ட ளவில் பணியச் செய்வாய் படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடியுண்டேனும் விளம்பிலுன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ சகலகலா வல்லியே.

பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்களுக்கு ஆன்மீக அறிவினை வளர்க்கவேண்டும். பெற்றோர்களும் பிள்ளைகளுக்கு சகலகலாவல்லி மாலையைத் தினமும் படிக்கச் செய்து, தோத்திரம் செய்து நல்ல இறை நம்பிக்கையுள்ள பிள்ளைகளாக, கல்வி, அறிவிலே வல்லவர் களாக வளர்க்கவேண்டும்.

புத்தகம் தாங்கிய நங்கை, கலைமகள் வெண்ணிற ஆடை அணிந்து, வெள்ளைத் தாமரையிலே வீற்றிருக்கின்றாள். ஒரு கையில் வெண் தாமரைப் பூவினை விரும்பி ஏற்றிருக்கின் றாள். அந்தத் தேவியின் பாதங்களை எனது தலை சூடிக்கொள்ளும். எனது வாய் தோத்திரங் களையே சொல்லும். கலைமகள் என்றும், மலைமகள் என்றும் இன்னும் பல உருவங்களிலும் காணுகின்ற தேவியை உள்ளம் குழைந்து தெய்வத் தமிழிலே ஞானத்தமிழ் முனிவர் பாடியுள்ளார்.

பராசக்தியைப் பல வடிவங்களிலே, பல வழிபாட்டு நிலைகளிலே தரிசனம் கண்டு ஊனும், உள்ளமும் உருகிப் பாடுகிறார் திருமூலர். அவளுடைய அருளாற்றலை அறியாத தேவர்கள் இல்லை. அவளுடைய துணையின்றி எந்தத் தவமும் ஆகாது. அம்பிகையின் ஆற்றலைக்கொண்டுதான் ஐந்தொழில்களும் நடைபெறுகின்றன. பஞ்சமூர்த்திகளும் தேவி யினுடைய ஆற்றலினாலே இயங்குகிறார்கள். பராசக்தியின் துணையில்லாமல் முத்தியைப் பெற இயலாது.

அவளையறியா அமரருமில்லை
அவளன்றிச் செய்யும் அருந்தவமில்லை
அவளன்றி ஐவரால் ஆவதொன்றில்லை
அவளன்றி ஊர்புகு ஆறு அறியேனே.

ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் ஏய உணர்விக்கும் என் அம்மையாகிய வாணி சரஸ்வதியின் வடிவத்தை திருமூலர் விளக்குகிறார். உள்ளங்கையிலே அறிவுச்

*வாழ்க்கைக்கு மூச்சு எவ்வளவு அவசியமோ அப்படியேதான் உழைப்பும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வமாகிய ஏடு தாங்கிய (புத்தகம்) நங்கை கலைமகள் வெண்ணிற ஆடை அணிந்து, வெள்ளைத் தாமரைப் பூவில் வீற்றிருக்கிறாள். ஒரு கையில் வெண்தாமரை மலரை விரும்பி ஏந்தியும் இருக்கிறாள். அந்தத் தேவியின் பாதங்களை என் தலை சூடிக்கொள்ளும். எனது வாய் தோத்திரங்களையே சொல்லும். கலைவாணியை உள்ளம் குழைந்து தெய்வத் தமிழிலே ஞானத் தமிழ்முனிவர் பாடியுள்ளார்.

பிறவி நோய் நீங்குதற்கு அம்பிகையின் பாதங்களைப் பணிதல் வேண்டும். உலகியல் பற்றுக்கள் நீங்குதற்கு, ஆசைச்சங்கிலி அறுவதற்கு துறவிகளுக்கு அருளும் தலைவியாகிய தையல்நாயகியின் பாதங்களைப் பற்றிப்பிடிக்க வேண்டும். பிரபஞ்சமயக்கத்தை தனது அருட் பார்வையால் அகற்றும் மனோன்மணியைப் பக்தியோடு பணிந்து வழிபட்டால் கொடிய பிறவித் துன்பம் நீங்கிவிடும்.

தையல் நல்லாளை, தவத்தின் தலைவியை
மையலைப் போக்கும் மனோன்மணி மங்கையைப்
பையநின்று ஏத்திப் பணிமின் பணிந்தபின்
வெய்ய பவம் இனி மேவகிலாவே.

எங்கும் வியாபித்திருக்கின்ற பரிபூரண சக்தியாகிய பராசக்தியை, ஞானசொரூபியாகிய பராசக்தியை, திருவருளாகிய பராசக்தியை அடைவதே பரமலட்சியமாக வேண்டும். அகிலாண்ட கோடி நாயகியாம் அன்னை பராசக்தியை என்றும் மறவாமல் நிலையாய் நின்று துதிப்போர்க்கு குறை என்பது எதுவுமே இல்லை.

அத்வைதம் பாடிய ஆதிசங்கரர் அம்பிகையின் அழகை அழகின் அலைகளை, அந்த அலைகளால் ஏற்பட்ட தாக்கத்தை "சௌந்தர்ய லஹரி"யாகப் பாடினார். அம்பிகை அழகுதான் அழகு என்று நடைமுறையில் சொல்லும் அனைத்தும் அவளிடமிருந்து பிறந்தது தானே. அப்படி இருக்கையில் அவள் அழகாய் இருப்பதில் என்ன ஆச்சரியம்!

சகலகலா வாணியைச் சரணடைந்து இகமும், பரமும் நல்ல சுகமளிக்கும் கல்வியை வேண்டி, அறம், பொருள், இன்பமும், ஆற்றலும், ஆயுளும், ஆத்மஞானமும் பெற்று, அந்த நான்முகன் துணைவி, பல்லுயிர் நாவு தோறும் உறையும் வாணியின் பூவடி முடிமிசை புனைந்து போற்றி, அன்னையின் திருவருட்கடாட்சம் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக!

வெள்ளைக் கலையுடுத்து வீணையும் மீட்டி
வெண் தாமரைமலர் மேல் வீற்றிருக்கும் கலைமகளே
உள்ளம் கசிந்துருகி வேண்டுகின்றேன் அம்மா
உவந்து எனது நாவினிலே உறைவாயம்மா.

சாரதையே, கலைவாணியே சகல கலாவல்லியே
பாரதியே நின்னைச் சந்ததம் தொழுதிடுவேன்
நீயே கதி! எனத்தொழும் ஏழைக்கு இரங்கி
ஞானமழை பொழிவாயேல் கானமழைநான் பொழிவேன்.

*தாங்கள் செய்யும் தவறுகளுக்கு அவரவர்கள் சூட்டிக்கொள்ளும் பெயர்தான் அனுபவம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயகலைக் கெல்லாம் அரசியே சரஸ்வதியே
தூய மனங்களில் வீற்றிருக்கும் நாயகியே
நானிலம் போற்றும் நான்முகன் தேவியே
அழியாத அறிவுச் செல்வம் அள்ளிச் சொரிந்திடுவாய்.

வெண்பூவில் வீற்றிருக்கும் பெண்பூவே அம்மாவுன்
கண்பூவைத் திறந்தாயேல் கல்லாரும் கற்றவராவரே
அறுபத்து கலைஞானம் அருள்பவளே
இன்னிசையால் செந்தமிழால் உனைப்பாட இனிதே அருள்வாயம்மா.

(தொடரும்...

சந்நிதியில் கோயில் கொண்டான் அழகன் முருகன்
அவன் அடியார்கள் மனங்களிலே நிறைந்து நிற்கின்றான்
ஆறுபடை வீடுகளில் குடியிருப்பவன் இங்கே ஆற்றங்கரை ஓரத்திலும் குடியிருக்கின்றான்
தொண்டைமான் ஆற்றங்கரையிலும் குடிகொண்டிருக்கின்றான்.

(சந்நிதியில் கோயில்....

அடியார்கள் மடங்களிலே அவனிருக்கின்றான் - அங்கே
அன்னதானம் வழங்க அவன் அருள் புரிகின்றான் - அதனால்
அன்னதானக் கந்தன் என்று பெயரும் பெற்றனன்.

தஞ்சம் என வருவோர்க்கு தஞ்சம் அளிக்கின்றான் - அவர்கள்
துன்பங்களை நீக்கி வாழ வைக்கின்றான் மகிழ்வாய் வாழ வைக்கின்றான்.

சந்நிதியான் ஆச்சிரமம் அவனது அருளே - அங்கே
மோகனதாஸ் சுவாமிகளும் அவனது உருவே.

அன்போடு அரவணைத்து அன்னமிடுகின்றார் அதனால்
அடியார்கள் மனங்குளிர அவரை வாழ்த்திச் செல்கின்றனர்.

கலைகள் பல வளர பணிபுரிகின்றார்
பிணிகள் ஏதும் வந்திடாமல் முகாம்கள் நடாத்துகின்றார்
மருத்துவ முகாம்கள் நடாத்துகின்றார்.
ஏழைகளின் வாழ்வுயர தினம் உழைக்கின்றார்
அவர்தம் வாழ்வாதாரம் பெருக உதவி புரிகின்றார்
கற்பதற்கும் மாணவர்க்கு உதவி புரிகின்றார் - அதனால்
கந்தனது உருவமாக அடியார்கள் அவரைப் பார்க்கின்றார்.

-குப்பிளான் சிவகுமார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதர்களுடைய வாழ்க்கையைச் சமயங்கள் நெறிப்படுத்துகின்றன

– திரு பு. கதிரித்தம்பி அவர்கள் –

உலகில் பல இன, மொழி பேசும் மக்கள் வாழ்கின்றார்கள். இதனால் உலகில் பல சமயங்கள் தோன்றின. மக்கள் தங்கள் சமயநெறிப்படி வாழத் தலைப்பட்டனர். உலகில் பல சமயங்கள் இருந்தாலும், நல்ல ஒழுக்கங்களையும், இறைவனை அடையும் பாதைகளையும் சமய வேதநெறியில் கூறப்பட்ட கருத்துக்களையும் போதித்து நிற்கின்றன. இதனால் ஒவ்வொரு மனிதனும் தங்கள் சமய நெறிப்படி வாழ்க்கையை நடத்தி வாழ்கின்றார்களென்பதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம்.

மனித வாழ்க்கையில் சமயம் ஒன்றிருப்பதையும், தங்கள் சமயம்தான் முதன்மையான சமயமென்னும் மனப்பாங்கையும் மக்களிடம் ஏற்றிவிடுகின்றது. உலகிலுள்ள சமயங்களில் கிறீஸ்தவ சமயம், புத்தசமயம், இஸ்லாம் சமயம், சமணசமயம் என்பவைகள் தொடங்கிய காலங்களையும், அந்தந்த சமயக்கருத்துக்களையும் கூறி நிற்கின்றன. ஆனால் சைவ சமயத்திற்கு தொடங்கிய காலமோ தொடக்கிய கர்த்தாக்களையோ அறியாது தனித் தத்துவச் சமயமாக விளங்குகின்றது. எமது சமயக் கடவுளை மாணிக்கவாசக சுவாமிகள் "ஆதியும் அந்தமுமில்லா அரும்பெருஞ் சோதி" என்றும், திருநாவுக்கரசு நாயனார் கைலாயப் பதிகத்தில் "முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி" என்றும் அருளியுள்ளார். எனவே சைவ சமயம் ஆதியும் அந்தமுமில்லாத சமயமென வெளித்தோன்றி நிற்கின்றது. சமய ஆராய்ச்சிகள் பல செய்த வெளிநாட்டு அறிஞர் "போப்" அவர்களும் அநாதியான சமயமென சைவசமயம் எண்ணத்தோன்றுவதாகக் கூறியுள்ளார். தற்பொழுது அமெரிக்க நாசா விஞ்ஞானிகள் சைவ சமயச் சிறப்பை உணர்ந்து தமது விஞ்ஞான கூடத்தில் நடராஜர் திருவுருவம் அமைத்திருப்பதாகப் பத்திரிகை மூலம் அறிகின்றோம். இந்நிலையில் எல்லாச் சமயங்களும் கடவுள் ஒன்று உண்டு என்பதில் உறுதியாக உள்ளனர். இதனால் அவர்கள் சமயநெறிப்படி வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள்.

உலகில் "தோன்றிய சமயங்கள்" தங்களுக்கு ஒரு முடிவு வரும் என எண்ணி, மனம் பயம் அடைந்து, தங்கள் சமயம்தான் முதன்மையான சமயம் எனக் காட்டுவதற்கு, தோன்றாச் சமயமாகிய சைவ சமயத்தவர் இந்தியாவில் சமண சமயத்தவர்களால் துன்புறுத்தப்பட்டனர். ஆட்சி அதிகாரத்தில் இருந்த சமணர்கள், அரசனைத் தூண்டி தங்களுடன் வாதஞ்செய்ய சைவசமயத்தவரை அழைத்தனர். சமண சமயத்தவர்களின் நிலையை இறைவன் உணர்ந்து சீர்காழியில் திருஞானசம்பந்தரை அவதாரம் எடுக்கச் செய்து மூன்று வயதில் அவரைப் பாடவும் வைத்தார். மூன்று வயதில் பாடிய திருஞானசம்பந்தரின் அருட்செயலையும் சமணர் உணராது மூன்று வயதுப் பாலகனை அனல்வாதம், புனல்வாதஞ் செய்ய வரும்படி அழைத்தனர்.

*ஆசையும் ஏக்கமும் செல்வத்தைச் சேர்க்காது. உழைப்பே செல்வத்தைத் தரும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதஞ் செய்யச் சென்ற திருஞானசம்பந்தர் தேவாரப்பதிகத்தை ஏட்டில் எழுதி, கொழுந்துவிட்டு எரியும் தீயில் போட்டார். அதுபோல் சமணர்களும் தங்கள் சமய பாடலை எழுதி எரியும் தீயில் போட்டனர். திருஞானசம்பந்தர் போட்ட ஏடு பச்சென்று எரியாது இருந்தது. சமணர் போட்ட ஏடு எரிந்து சாம்பல் ஆனது. இதுகண்டு சமணர்களும் அரசனும் திகைத்தனர். அதன்பின் ஓடும் நீரோடையில் திருஞானசம்பந்தரும் சமணரும் தங்கள் ஏடுகளைப் போட்டனர். திருஞான சம்பந்தர் ஏடு எதிரேறி சென்றது. சமணர் இட்ட ஏடு அள்ளுண்டு சென்றதைக் கண்ட அரசன் சைவசமயம் அற்புத சமயம் என்பதை உணர்ந்தான். அதேபோல் அக்காலப் பகுதியில் சைவ சமயத்தில் ஈடுபட்ட திருநாவுக்கரசரை சமணர்களோடு சேர்ந்த அரசன் துன்புறுத்தும் வேலை களில் ஈடுபடும் நோக்கில் ஏழுநாள் ஊண் உணவின்றி சுண்ணாம்பறையில் அடைத்தும் இறவாது பூரிப்புடையவராக இருந்ததைக்கண்டு நஞ்சு கலந்த பாற்சோற்றைக் கொடுத்தும், யானையை ஏவிவிட்டும் யானை வலம்வந்து அவரை வணங்கியதைக் கண்டும் மனம் கொதிப்படைந்து, கல்லோடு கட்டிக் கடலில் போட்டும், கல் தெப்பமாக கரை சேர்ந்ததையும் அறிந்த அரசன் சைவசமயத்திற்கு மாறி செய்த பாவங்களுக்குப் பிராயச்சித்தமாக ஒரு கோயிலையும் கட்டுவித்தான். இதுபோல் இலங்கையில் அன்று வாழ்ந்த பிக்குகள், தாம் வாதஞ்செய்து சிதம்பரத்தை புத்தபள்ளியாக்குவோம் எனக் கூறி அரசனையும் அழைத்துக் கொண்டு சிதம்பரஞ் சென்று மாணிக்கவாசகரிடம் வாதிட ஆரம்பித்தனர். மாணிக்கவாசகர் புத்த பிக்குகளை காணக்கூடாதென்று திரைபோட்டு தனது வினாக்களுக்கு பதில்கூற அழைத்தார். பிக்குகள் வாய்பேசமுடியாது திணற, அரசனுடன் சென்ற ஊமை மகளை அழைத்து, தனது வினாக்களுக்கு பதில் சொல்ல வைத்தார். இதைக் கண்ட அரசன் சைவசமயத்தவனாக மாறி, நிபந்தனைக்கு பிக்குகளை கழுமரத்தில் ஏற்றினான் என்று திருவாதபுராணம் கூறுகின்றது.

தோன்றிய சமயங்களாகிய கிறீஸ்தவ சமயம், புத்தசமயம் தங்கள் சமயம் அழியும் என்னும் ஐயப்பாட்டில் இருக்கின்றன. இதனால் சைவசமயத்தவர்களுக்கு பொன், பொருள், வேறு வேலைவாய்ப்பு உதவிகள் செய்து தங்கள் பக்கம் ஈர்க்க முயற்சிக்கின்றனர். எவை எவ்வாறு நடப்பினும் சமய நெறியில் பற்றுள்ள மக்கள் தங்கள் சமயநெறிப்படி வாழ்க்கையை நடத்திக்கொண்டு போகிறார்கள்.

பஞ்சமா பாதகங்களை ஒழிக்கச் சொல்லும் சமயம் சைவசமயம் ஒன்றே ஆகும். மற்றைய சமயங்களையும் அரவணைத்துச் செல்லும் சமயமும் சைவசமயமே ஆகும். இறையருள் பெற்ற நாயன்மார்களும் ஞானிகளும் சித்தர்களும் தோன்றிய சமயம் சைவ சமயமாகும். பைபிளை தமிழில் மொழிபெயர்த்த ஆறுமுகநாவலர் அவர்கள் கிறீஸ்தவ கல்லூரியில் கற்பித்தும், சைவ ஒழுக்க நெறியினின்றும் மாறாது, மறு சமயங்களின் கண்டனங்களுக்கு, பதில் கண்டன உரை கூறியும், பதிப்பித்தும், பிரசாரங்கள் பல செய்தும் சைவ சமய உண்மை களை உலகிற்கு அறியவைத்தவர் என்பதை உலகம் அறியும்.

உலகில் பல இன மக்கள் தோன்றி, பல சமயங்களின் கோட்பாடுகளைக் கடைப் பிடித்தும், நல்லொழுக்கமுடையவராக வாழ்ந்தும், பிறரை மதித்து உதவி செய்பவர்களாகவும், தீய பழக்கங்களை அறவே ஒழித்தும், ஆறறிவினைக் கொண்டு பிறவிப்பிணியை நீக்க

*நம்பிக்கை இருந்தால் அவமானங்கள்கூட வெற்றிக்கான பாதையை அமைக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடொறும் கோயில் சென்று வழிபட்டு இல்லத்தில் குடும்பத்துடன் கூடிக் குலாவி சந்தோஷமாக வாழப் பழகிக்கொள்ள வேண்டுமென்பது முதியோர் மூதுரையாகும். வாழ்க்கையில் வரும் இடர்களையும் பொறுத்து சமயநெறி வழுவாது வாழ்தல் மனிதப்பண்பாகும். சமயத்தில் கூறியபடி "என் கடன் பணிசெய்து கிடப்பதாகும்" என்ற உண்மையை மனதில் இருத்தி பிறருக்கு யாதொரு தீங்கும் செய்யாது அயலாருடன் ஒற்றுமையாக வாழப்பழகிக்கொள்ள வேண்டும்.

பூமியில் பிறந்த பலனைப் பெறுவதற்கு கலியுகவரதன் செல்வச்சந்நிதியான் ஆலயம் சென்று நிம்மதியைப் பெற்றுக்கொள்ளுங்கள். நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமுடையவராக வாழலாம். எனவே மனிதனின் வாழ்வை சமயங்கள் நெறிப்படுத்துகின்ற உண்மையை உணரலாம்.

## புலிக்கால் பெற்ற முனிவர்

முன்னொரு காலத்தில் மத்தியந்தண முனிவர் என்பவர் இருந்தார். அவருக்கு ஒரு மகன் பிறந்தார். நல்லொழுக்கங்களுடன் திகழ்ந்த அந்த மகன் பல கலைகளையும் கற்றுத் தேர்ச்சி பெற்றார். சிவபெருமானை வழிபடுவதிலேயே அவர் உள்ளம் நாட்டம் கொண்டது.

தந்தையின் அனுமதி பெற்றுத் தில்லைக்கு வந்தார் அவர். அங்கே ஓரிடத்திலே அழகிய பூஞ்சோலையையும் அதன் நடுவில் சிவலிங்கமும் இருப்பதைக் கண்டார். அவர் உள்ளம் மகிழ்ச்சியில் திளைத்தது.

அங்கேயே நிலையாகத் தங்கிய அவர் பூஞ்சோலையில் இருந்து மலர்களைப் பறித்து வந்து நாள்தோறும் இறைவனுக்கு வழிபாடு செய்துகொண்டிருந்தார்.

தான் வழிபடுவதற்காகக் கொண்டு வந்திருந்த மலர்களைப் பார்த்தார் அவர். அவற்றுள் பழைய மலர்களும் சிதைந்த மலர்களும் இருந்தன.

உள்ளம் துடித்தார் அவர். "புத்தம் புதிய தூய்மையான மலர்களைப் பறித்து இறைவனுக்கு வழிபாடு செய்யத் தன்னால் முடியவில்லையே" என்று ஏங்கினார்.

"விடிந்தபின் மலர் பறித்தால் அதில் வண்டுகள் அமர்ந்து தேன் உண்டிருக்கும். இரவில் சென்று பறிக்க முயன்றால் காட்டில் வழி தெரியாது. மரங்களின் மீது ஏறினால் வழுக்கும். என்ன செய்வது? என்று சிந்தித்தார்.

இந்தச் சிக்கல் தீர அவருக்கு ஒரே வழிதான் தோன்றியது. "இறைவா! என் கைகளிலும் கால்களிலும் புலிகளுக்கு உள்ளதுபோல வலிமையான கூர்மையான நகங்கள் உண்டாக வேண்டும். வழி தெரிவதற்காக அவற்றில் கண்களும் தோன்ற வேண்டும். அப்பொழுதுதான் நகங்களால் மரத்தைப் பிடித்து ஏறிக் கண்களால் தூய்மையான மலர்களைத் தேர்ந்தெடுத்து வழிபட முடியும்" என்று வேண்டினார்.

இறைவனும் அவர் வேண்டியபடியே அருள் செய்தார். அந்த முனிவரின் கால்களிலும் கைகளிலும் புலி நகங்கள் தோன்றின. அவற்றில் கண்களும் இருந்தன.

இதனால் அவருக்குப் புலிக்கால் முனிவர் (வியாக்கியபாதர்) என்ற பெயர் ஏற்பட்டது. நாள்தோறும் அவர் பூஞ்சோலைக்குள் நுழைந்து புத்தம் புதிய மலர்களைப் பறித்து இறைவனை வழிபட்டு வந்தார்.

*சுயமாக முடிவெடுக்கத் தெரியாதவன் பெரும்பாலும் அடிமையாகவே இருப்பான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழித்துணை 70

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 உம்மைநீர் வருத்துதல்தான் இறைமார்க்கம் என்றில்லை
பிறர்வருத்தம் நீக்குதலில் இறைமார்க்கம் அதிகமுண்டு
நீர்வருந்த மகிழ்வதற்கு இறை கொடிது இல்லையதால்
பிறர்வருந்தா வழிநடப்பீர் இறுதியிலே இறையடைவீர்.

02 கேட்பதும் பார்ப்பதும்தான் இறைமார்க்கம் என்றில்லை
சொல்லிலும் செயலிலும்தான் இறைமார்க்கம் அதிகமுண்டு
கேட்பதுவும் பார்ப்பதுவும் இறையுணர உதவுதல்போல்
நல்லனவே செய்து சொல்வீர் நாளடைவில் இறையடைவீர்.

03 நண்பருக்கு உதவுவது நியாயம்தான் ஆனாலும்
எதிரிக்கு உதவுவதே மேலாகும் ஏனென்றால்
நண்பருக்கு உதவுவது நட்பினையே மேம்படுத்தும்
எதிரிக்கு உதவுவது எதிரியையும் நண்பராக்கும்.

04 தன்னவற்கு உதவுவது நியாயம்தான் ஆனாலும்
பிறருக்கு உதவுவதே மேலாகும் ஏனென்றால்
தன்னவற்கு உதவுவது தம்முறவை மேம்படுத்தும்
பிறருக்கு உதவுவதே பிறருறவைத் தனதாக்கும்.

05 அறிஞர்க்கு உதவுவது நியாயம் தான் ஆனாலும்
அறிவிலாற்கு உதவுவதே மேலாகும் ஏனென்றால்
அறிஞர்க்கு உதவுவது பேரறிவை உருவாக்கும்
அறிவிலாற்கு உதவுவது அறிஞர்களை உருவாக்கும்.

06 சொந்தத்திற் குதவுவது நியாயம் தான் ஆனாலும்
நொந்தார்க்கு உதவுவதே மேலாகும் ஏனென்றால்
சொந்தத்திற் குதவுவது பந்தத்தைப் பலப்படுத்தும்
நொந்தார்க்கு உதவுவது சொந்தத்தை உருவாக்கும்.

*அறிவை முதலீடாக வைத்தால் உலகை ஆளலாம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 எல்லோற்கும் உதவுவது நியாயம் தான் ஆனாலும்
இல்லாற்கு உதவுவதே மேலாகும் ஏனென்றால்
எல்லோற்கும் உதவுவது உதவியென்றே முடிந்துவிடும்
இல்லாற்கு உதவுவது உதவுவோரை உருவாக்கும்.

08 கொடியவர் என்றொருவர் குணத்திற்குக் குறிசுடுமுன்
அடியவர் அப்படியேன் மாறினார் என்றறிவீர்
முடிவிலோர் காரணம் நாமாயும் இருந்திடலாம்
படியிறங்கிப் பார்த்திடுவீர் கொடியவரும் அடிபணிவார்.

09 கடிதான வார்த்தைகளைக் காலத்தால் உதிர்க்கு முன்னர்
மடியிலதைச் சுமப்போரின் மனநிலையை அறிந்திடுவீர்
முடிவிலது எமக்கேதான் இடியாயும் வீழ்ந்திடலாம்
துடிதுடிப்பால் இழந்தவற்றை நிதானத்தால் பெற்றிடலாம்.

10 பிடிவாதம் காட்டியே பிரச்சினையை வளர்க்கு முன்னர்
அடிதடியால் ஆவது ஏதென்று கண்டறிவீர்
முடிவிலது எமக்கேதான் முடிவாயும் முடிந்திடலாம்
படித்திடத் தவறியதை படிப்பினையில் பெற்றிடலாம்.

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

**காசுக்கட்டளை**
செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
தொ.இல— 0213219599, 0212263406

**காசோலை**
செ. மோகனதாஸ்
க.இல— 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

**Swift code - BCEYLKLX 028 - 7342444**

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com

*எதை இழந்தீர்கள் என்பதல்ல முக்கியம். என்ன மிச்சம் இருக்கிறது என்பதே முக்கியம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மீகமும் நாமும்

– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் –

ஆன்மீகமும் நாமும் என்னும் விடயம் பற்றி இன்றைய சிந்தனைக்கு எடுத்துக் கொள்வோம். ஆன்மாவோடு சம்பந்தப்பட்டது ஆன்மீகம். ஆன்மீக வழியில் சென்று ஈசனை அடைதல் ஆன்மாவின் இலட்சியம். மனிதப் பிறவியின் இலட்சியமும் அதுவே. ஆன்மீகத் துறையில் முற்றும் முழுதுமாக ஈடுபடுபவர்கள் ஆன்மீக வாதிகள் என்றழைக்கப்படுவர்.

எமது பிறவியின் இலட்சியத்தை அடைய இரு விஷயங்களை முதலில் உணர்ந்தாக வேண்டும்.

இறைவன் சர்வ வியாபகர், அவரது ஆதிக்கத்திலேயே இப் பிரபஞ்சமும் நாமும் இயங்குகின்றோம். கடவுள் பற்றிய நம்பிக்கை எமது மனதில் உறுதியாக இருந்தாக வேண்டும். நாம் எம்மதத்திற்கு உரியவராக இருப்பினும் சரி, எவ்வினத்தைச் சேர்ந்தவராயினும் சரி, எம்மொழி பேசுபவராயினும் சரி, எம்மிடம் பொதுப்படையாக "நமக்கும் மேலே ஒருவனடா" அவன் நாலும் தெரிந்த தலைவனடா என்ற இறை நம்பிக்கை இருந்தாக வேண்டும். அதாவது இறை நம்பிக்கை சாதி மதம் இன மொழி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டது. இறை நம்பிக்கைக்கு அடித்தளமாகவும் அடையாளமாகவும் இறைவனுக்கும் எமக்கும் பாலமாக அமைவது இறை வழிபாடு.

எமது அன்றாட வாழ்க்கையிலே நாம் எத்தனையோ தூரம் ஆன்மீகத் துறையில் ஈடுபட்டுள்ளோம் என்பதை பார்ப்போம். ஆன்மீகப் பயிற்சி எமது அன்றாட வாழ்க்கையில் தவறாது அமைய வேண்டியுள்ளதோர் அம்சமாகும்.

எமக்கு காலைப்பொழுது விடியும்போதுதான் ஒருநாள் ஆரம்பிக்கின்றது, என நாம் கருதுகின்றோம். ஆனால் உண்மையில் நாம் தூங்கச் செல்லும்போதே எமது தூக்கத்தில் மறுநாட் செயற்பாடு தயார் ஆகியுள்ளது. நிம்மதியான ஆழ்ந்த உறக்கம் கொண்டு அடுத்தநாட் காலை நாம் எழுவோமானால் அன்றைய தினம் எம்மால் உற்சாகமாக மன அமைதியோடு வேலை செய்யமுடியும். மாறாக இரவு தூக்கமின்மை, கெட்ட கனவுகள் உண்டாகுமேயானால் அடுத்தநாள் உற்சாகமாக வேலை செய்யமுடியாது எமது மனம் குழப்பம் அடைந்திருக்கும். உள்ளம் மாத்திரமல்ல உடலும் சமநிலையை இழந்திருக்கும்.

எனவே, நாம் தூங்கச் செல்லும்போது தினமும் நல்ல சிந்தனைகளோடு துயில்கொள்ளச் செல்ல வேண்டும். இக்காலத்தில் எத்தனை விகிதம் இவ்வாறு நடக்கின்றது என்று சிந்தித்துப் பாருங்கள்! வீட்டின் நடுவிலே, எல்லோரது கவனத்தையும் ஈர்க்கும் தொலைக்காட்சி பெட்டியிலே பயங்கரமான சண்டைக் காட்சிகளையும் பழிவாங்கும் காட்சிகள் கொண்ட நாடகங்களையும் பார்த்தபின் தூங்கச் சென்றால், எப்படி ஐயா அமைதியான ஆழ்ந்த உறக்கம் வரும்! கெட்ட கனவுகள் அல்லவா வரும். இது நடைமுறைத் தத்துவம். எனவே தூங்கச் செல்லும்முன் சில நிமிடம் தன்னும் ஜபத்திலோ தியானத்திலோ நேரத்தைச் செலவிடல் நன்று.

*பிழையை எங்கு கண்டாலும் அதை உன்னிடம் இருந்தால் திருத்திக்கொள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூங்குமுன் அன்று முழுவதும் நாம் செய்த செயல்களை நினைவுக்குக் கொண்டுவந்து நாம் செய்த நற்செயல்களுக்கு இறைவனுக்கு நன்றி கூறி, செய்த தவறுகளுக்கு ஈசனிடமும் மன்னிப்புக்கேட்டு தூங்கச் செல்லல் நல்லதோர் பயிற்சியாகும். அத்தோடு எமக்கு நன்மை செய்யும் மனோபாவத்தை தந்தருள வேண்டும் என்று இறையைத் துதிக்க வேண்டும். இதன்பின் நாம் தூங்கப் போவோமேயானால், எமது மனம் சலனமற்று அமைதிபெறும், நிம்மதியான தூக்கம் வரும், விடியும்போது இனிமையாய் அமையும். இது அனுபவசாலிகள் கண்ட உண்மை.

காலையில் ஸ்நானம் செய்தபின் புறத் தூய்மையோடு நாம் அகத்தூய்மையை மேற் கொள்ள வேண்டும். உடலைக் குளித்து தூய்மையாக்கலாம், உள்ளத்தை எவ்வாறு தூய்மை ஆக்குவது? மந்திரம், ஸ்லோகம் தோத்திரம் சொல்லி நல்ல சிந்தனைகள் மூலம்தான் உள்ளத்தையும் தூய்மையாக்கலாம்.

நீராடல் முடிந்ததும், சிறிய அளவிலோ பெரிய அளவிலோ இறைவழிபாடு எல்லா இல்லங்களிலும் எம்மவரிடம் இடம்பெறுவது வழமை. இதன்படி உணவருந்தல், உணவு உண்ணும்முன் எம் முன்னோர் என்ன செய்தார்கள் என்று கேளுங்கள். தாம் உண்ணும் உணவை இறைவனுக்கு அர்ப்பணித்து அதனையும் பிரசாதமாக ஏற்றுப் புனிதமாக உண்ண ஆரம்பிக்கும் வழக்கம் இவர்களிடையே இருந்து வந்தது. அதேவேளை, உண்ணமுன் பாடுவதற்கு என்று தேவாரமே ஒன்று உள்ளது. "அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்" என்றாரம்பிக்கும் தேவாரம் அது. இப்பழக்கத்தால் உணர்வும் உணவும் புனிதமாகின்றது. மன நிறைவு ஏற்படு கின்றது. அதுவும் ஒரு பூஜைபோல் ஆகின்றது. இங்கேதான், இறை சிந்தனை எத்தனை அழகு! எத்தனை புனிதம்! எத்தனை தூய்மை! என்பதை யாம் உணரமுடிகின்றது.

அடுத்து பயணம் செய்யும்போது நீண்டதூரம் எனினும் சிலர் மனதுள்ளே தேவஸ்லோகம் சொல்லிய வண்ணம் இருத்தல் கண்கூடு. ஆனால் எல்லோருக்கும் இது சாத்தியம் என்று எனக்குத் தோன்றவில்லை இதற்கு திடமான மன உறுதியும் அவதானமும் செயலுணர்வும் அவசியம். அல்லது பயணத்தின்போது இறங்கவேண்டிய இடத்தையும் கோட்டைவிட்டு விட்டு அதோ கதிதான்.

எனவே, ஒரு முழு நாளின்போது இறைவழிபாட்டிற்காக நாம் எவ்வாறு உள்ளத்தையும், நேரத்தையும் ஒதுக்கலாம் என்ற ஓர் கணிப்பீடு இது. இதை பின்பற்றல் அவசியம். அதன் வெற்றி அவரவர் மனோதிடத்தைப் பொறுத்துள்ளது. இருப்பினும் காலை மாலை உணவு, தூக்கத்தின் முன், நித்திரை விழித்தெழும் நேரம் ஆகிய நேரங்களில் இறை சிந்தனை சிறிய அளவில் தன்னும் தவறாது செய்தல் மிக அவசியம். இதனால் தன்னம்பிக்கையும் அச்சமின்மையும் எமது உள்ளத்தில் வளரும். பின் எந்த நேரம் மிச்சம் என்று கேட்கின்றீரகளா?

அதிகமோ சொற்பமோ, இறைவழிபாட்டிற்குத்தானே! நேரத்தை ஒதுக்குவோம். இது தவப்பொழுதல்லவா?

---

எத்தனை பூஜை, தியானம், தவம் செய்தாலும் சொன்ன வார்த்தையைக் காப்பாற்றும் எண்ணம் மட்டும் இல்லையெனில் அத்தனையும் போய்விடும். இறைவன் நீ செய்யும் செயலைப் பார்ப்பதில்லை. உன் உள்ளுணர்வைத்தான் பார்க்கிறார்.

*நாளை என்பது கனவைப் போன்றது. இன்றைய நிஜத்தை ரசித்துவிடு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓங்கார நாடி என்னும் சுழுமுனை

*(தொடர்ச்சி...*

**—திரு கு. சிவபாலராஜா** அவர்கள்—

அசாதாரண சக்தி அல்லது ஞானம் ஒருவரிடத்தில் தோன்றினால், அவரைச் சற்று ஆய்வுசெய்து அவரை உற்றுநோக்கினால், அவரது குண்டலினி சக்தி சிறிதளவேனும் சுழுமுனை நாடி வழியாக அவருள் பயணம் செய்திருப்பது நமக்குப் புலனாகும். ஆனால் அவர் எவ்வித யோகப்பயிற்சியோ தியானமோ செய்திருக்கவில்லை என்பதும் நமக்குத் தெரியவரும். இதை இறைவனது அருள் என சித்தர்கள் குறிப்பிடுகின்றனர். சிலர் இதை முன்வினைப் பயன் எனக் குறிப்பிட்டுள்ளனர். அவர்கள் விரும்பியோ அல்லது விரும்பாமலோ இறையருளால் அவர்களுக்கு இந்நிலை அல்லது பயன் விளைந்துள்ளது. இது ஓர் இறை தரிசனமாகும். மனம் ஒன்றிய தெய்வ வழிபாட்டினாலும் குண்டலினி விழிப்பு நிலை ஏற்படலாம். சில யோகிகள் தங்களையும் அறியாது ஒரு சிறிது குண்டலினி சக்தியை சுழுமுனையுள் செலுத்துவதன்மூலம் அவர்களால் சில சாதனைகள் புரிய முடிகின்றது. இவை யாவும் குண்டலினி விழிப்பு நிலையாகும். இவ்வாற்றல் பெற்றோர் இறையாற்றல் பெற்றோராக உலகோரால் போற்றப்படுவார்கள். மனிதனிடம் இறையாற்றல் உண்டு என்பதும் இதனால் உணரப்பட்டுள்ளது. மேல் குறித்துள்ள திருமந்திரக் கருத்தின்படி நமது உடம்பினுள்ளே இறைவன் கோயில்கொண்டு அமர்ந்துள்ளான் என்பது தெளிவாகின்றது. இறைப்பேராற்றல் குண்டலினி சக்தியாகும். எமக்கு இறைவன் காட்டும் கருணை எம்மிடமுள்ள இந்த இறைப் பேராற்றலினால்தான் எமக்குக் கிடைக்கின்றது என்பதை நாம் உணர்வதில்லை. ஆனால், இதை உணர்தல் வேண்டும். பிறரிடத்தில் உள்ள அற்புத ஆற்றல்கள் எம்மிடத்திலும் உண்டு. அதனால், பிறர்மீது நாம் கோபம்கொள்ளத் தேவையில்லை. அந்த ஆற்றல் எம்முள் முடங் கிக்கிடக்கின்றது. சித்தர்கள் இதை உணர்ந்துள்ளார்கள். இப் பேராற்றலை நாமும் உணர்ந்து அதன்படி செயற்பட்டால் நாம் பேரானந்தநிலையை அடையலாம்.

சுழுமுனை நாடியினை நடுநாடி, சூனியம், பிரமரந்திரம், மகாமேரு, நெருப்பாறு, விந்துநிலை, லலாடம், நெற்றிக்கண் என்று சித்தர்கள் பலவாறு வழங்கியுள்ளனர். ஆனால் திருமூலர் சுழுமுனையை "சிவபூமி" என்றும், இறைவன் திருநடனமிடும் திருச்சிற்றம்பலமாகிய தில்லை எனவும் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளமை நோக்கத்தக்கது. அண்டத்தில் உள்ளவை யாவும் பிண்டத்திலும் உண்டு. அண்டத்தில் காணும் தீ, நீர், காற்று, ஆகாயம், மண் ஆகிய ஐம்பூதக் கூறுகள் பிண்டத்திலும் உண்டு. இக்கருத்தானது சித்தர்களால் நிறுவப்பட்டது. இதில் சுழுமுனையின் கட்டுப்பாட்டில் இயங்கும் நாடிகளின் நிலையை எவ்விதம் கணிப்பது என்பது ஒரு கேள்வியாகிறது. அவை ஐம்பூதக் கூறுகளுள் அடங்குவது எவ்வாறு? எனவே, திருமூலர் இக்கேள்விக்குப் பதிலளிக்கும்போது, ஐம்பூத மூலக் கூறுகளில் ஒன்றான மண் (பூமி)ணை எடுத்துக் கொண்டால், அருபமாகக் கணக்கிட்டு வரையப்பட்டுள்ள பூமத்தியரேகை மற்றும் வடக்கிலுள்ள அட்சரேகையை (கடகக்கோடு) வரையப்பட்டுள்ள கோடு இடகலை

*எதிர்ப்பவரிடம் துணிந்து நில். மதிப்பவரிடம் பணிந்து செல்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவும், தெற்கில் உள்ள மகர ரேகையாக வரையப்பட்டுள்ள கோடு பிங்கலையாகவும், இவை இரண்டு கோடுகளுக்கும் நடுவே வரையப்பட்டுள்ள பூமத்திய ரேகை (மத்தியகோடு) சுழுமுனை நாடியாகவும் அமைந்து செயலாற்றுவதாக திருமூலர் தெரிவித்துள்ளார். சித்தர் கணிப்பின்படி, வடக்கே உள்ள பொன்மலையும் தெற்கே உள்ள இலங்கையும் முறையே இடகலை, பிங்கலை என வழங்கப்படும். இவை இரண்டின் நடுவேயுள்ள தில்லையாகிய சிதம்பரம் நடுநாடியாகிய சுழுமுனை நாடி என வழங்கப்படும். புவியியல் அடிப்படையில் நெடுங்கோட்டின் வடக்கு, தெற்கு பகுதிகள் முறையே சிதம்பரத்தையும் இலங்கையையும் நேர்கோட்டில் தொட்டுச்செல்கின்றன. உடலில் இடகலைக்கும் பிங்கலைக்கும் இடையே காணப்படும் நடுநாடி சுழுமுனையாகும்.

பூதல மேருப் புறத்தான தெக்கணம்
ஓதும் இடைபிங் கலையொண் சுழுமுனையாம்
பாதி மதியோன் பயில்திரு வம்பலம்
ஏதமில் பூதாண்டத் தெல்லையி னீறே.

-திருமந்திரம்.

நடுநாடியே எல்லாவற்றையும் நடத்துகின்றது. புறத்தில் காணும் தில்லைவனம் - பொன்மலை தொடக்கம், தெற்கே இலங்கை வரையுள்ள நிலம் அனைத்தையும் நடு நின்று நடாத்துகின்றது. "கடவுள் தில்லைவனம் கைகண்டமூலம்" என இதனைத் திருமந்திரம் சிறப்பித்துக் கூறுகின்றது.

மூச்சு நான்கு நாட்கள் சுழுமுனையின் வழியே இயங்கினால் சிவம், சக்தி, விந்து, நாதம் என்ற நான்கையும் காணலாம். மூச்சு ஐந்து நாட்கள் இயங்கினால் -தூய்மையாக இயங்கினால் - களங்கமின்றி சிவம், சக்தி, ஆன்மா என்னும் மூன்றையும் காணலாம். சுழுமுனையில் பத்து நாட்கள் மூச்சு இயங்கினால் தன்னுடன் பொருந்திய சிவம், சக்தி ஆகியவற்றை அறியலாம். அவ்வாறே சுழுமுனையில் பதினைந்து நாட்கள் மூச்சு பொருந்தியவர் உள்ளத்தில் சிவம் ஒன்றே காண்பர். சுழுமுனையில் மேல் கீழ் இரு முனைகள் நிலைபெற்றால் வானக் கூறிலிருந்து ஆறு ஆதாரங்கள் அறியப்படும். சுழுமுனையில் மூச்சானது இருபத்தைந்து நாட்கள் இயங்கினால் தேயுவும், வாயுவும், வானமும் ஆகிய மூன்றும் விளங்கும். அவ்வாறு மேலும் இருபது நாட்கள் இயங்கினால் தேயுவும், வானமும் ஆகிய இரண்டும் சிறப்பாக விளங்கும். ஞானி சுழுமுனையில் பிராணனை 27 நாட்கள் நிறுத்தியிருந்தால் சோதி வடிவான சிவத்தைப் பிறர்க்கு உணர்த்துதல் கூடும். அவ்வாறு இருபத்தெட்டு நாட்கள் சுழுமுனையில் இருந்தால், பத்தாம் நிலையான மேல்நோக்கிய சகசிரதளத்தில் விளங்கும் ஆன்மாவைப் பிறர்க்கு உணர்த்த முடியும். இருபத்தொன்பது நாட்கள் இயங்கினாலும் அது இருபத்தெட்டு நாட்கள் இயங்குவதன் பலனையே கொடுக்கும். இருபத்தொன்பது நாட்கள் ஞானியருக்குப் பத்து நாட்கள் கழிவது போலவே இருக்கும். அவ்வாறே அது முப்பது நாட்கள் இருப்பினும் ஞானியர்க்கு அதுவும் ஏழு நாட்கள் கழிவது போன்றே இருக்கும்.

(முற்றும்)

*புகழ்ந்தால் மயங்காதே. இகழ்ந்தால் தளராதே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தன் கவசம்

– திரு பொ. பாலேஸ்வரன் அவர்கள் –

## கணபதி துதி

கணபதியே உன் நாமம் கணநேரம் மறந்தறியேன்
குணநிதியே நின் வேலன் புகழ்பாட நினைத்தறியேன்
எண்ணென்ன எழுத்தென்ன ஏதொன்றும் நானறியேன்
தண்ணென்ற சொல்தரவே தாள்பணிந்தேன் கணபதியே.

## சரஸ்வதி துதி

வெண்தாமரையில் வீற்றிருக்கும் நாமகளே
கண்தாமரையாய் காத்திருக்கும் கலைமகளே
விண்ணெலாம் பரவி நிற்கும் வேல்முருகன் தனைப்பாட
பண்ணெடுத்துப் பாவெழுத பாசுரமாய் நின்றிடம்மா.

## முருகன் துதி

தூயதமிழ் சொல்லெடுத்து சுந்தரனே உனைப்பாட
நல்ல தமிழ் சொல்தந்து நாவிருந்து காருமையா.

வில்லங்கம் போகும் பிறவிவினைகள் தான்மாழும்
கலக்கங்கள் தான் விலகும் காரியங்கள் ஆகிவிடும்
செல்வங்கள் தான் சேரும் சிறந்த நெறியளிக்கும்
வல்லவன் கழல் சேர்ந்தீஸ்வரன் கந்த கவசம் பாடிடவே.

ஓம் முருகா வாழ்க உமைமைந்தன் அடிவாழ்க
கண நேர மறந்தறியா கந்தவேள் தாள் வாழ்க
கோள்களை யாட்டும் குன்றின்மணி யடிவாழ்க
வேதத்திற்கும் வேதமான வேதநாயகன் தாள் வாழ்க
ஆதிக்கும் ஆதியான ஆதி நாயகன் தாள்வாழ்க
ஆர்ப்பரிக்கும் உலகை ஆட்டுவிக்கும் வேலவன் வாழ்க
பிறப்புக்கு மப்பால் பிறந்தறியா தவன் வாழ்க
காக்கும் தெய்வத்தின் கடைக்கண் விழிவாழ்க
நோக்கும் போதில் நோய் போகும் மனம் வாழ்க
வாக்கும் பலிக்கும் வடிவேலன் நாவாழ்க
முருகன் அடி போற்றி முடிவில்லாதவன் போற்றி
எத்திக்கும் காக்கும் இளைய வனடி போற்றி

சிரித்துக்கொண்டே இரு வலிகள் கூட விலகிக்கொள்ளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சத்தில் இருக்கும் நித்திலமே நீ போற்றி
வஞ்சமில்லா நெஞ்சத்தார்க்கு வரம் தரும் வேலா போற்றி
சந்நிதி குடியிருக்கும் சாந்தமே நீ போற்றி
சுகங்களைத் தருகின்ற சொர்க்கமே உன் அடி போற்றி
தாகம் தீர்த்தருளும் தங்கமே தாள் போற்றி
ஆராத இன்பத்தை தந்தருளும் வேலா போற்றி
தீராத நோயதனை தீர்த்தருளும் சந்நிதி போற்றி
சிந்தையி லிருக்கும் சிங்காரவேல னடிபோற்றி
அவன் தாள் வணங்க அவனருள் கிடைக்கும்
கந்த கவசம் பாடிடும் வாழ்வதை
சிந்தையில் இருத்தி சிறப்புடன் முடித்து
முந்தை வினை முழுதும் முற்றறக் கடந்து
கந்தன் தன் கருணை கடைக்கண்ணால் பார்வையிட்டு
எண்ணுக் கடங்காத வேலவன் தனை நினைத்து
விண்ணுக்கும் மண்ணுக்கும் விளங்காத வித்தகனை
கண்ணுக்கும் எட்டாத கந்தனின் கழலிறைஞ்சி
எல்லாப் பிறப்பும் பிறந்திட்ட பிறவியாகி
பொல்லா வினையை போக்குவிக்கும் வழியறியேன்
கந்தா உன் கழலடியை கண்டன்று பித்தானேன்
உய்விக்க வந்தந்த ஓங்கார சக்தியவன்
எய்த வினையறுக்கும் மயிலேறும் வாகனத்தான்
காயத்தை யின்று நடத்துவிக்கும் கருவியவன்
நேயத்தை காட்டி நினைக்க வைக்கும் தேவனவன்
கந்தா என்றே அகிலமெலாம் நின்ற சொருபன்
பொய்யான வாழ்வை புறந்தள்ளும் வித்தகனே
மெய்ஞானம் காட்டி மிளிர்கின்ற மெய்ஞனே
சொர்க்கத்தை காட்டி தூரத்தே நிற்கவைத்து
கர்ப்பக் கிரகத்தில் காட்சிதரும் தேவனே
நிர்க்கதியாய் இருக்கும் நேரத்தில் காத்திருந்து
துன்பம் தீர்க்க துணையாக வந்தவனே
கந்தா உன் பார்வையிலே உலகமே சுழலுதையா
இம்மானிலத்தில் உமைப்போல தெய்வமுண்டோ
ஆக்கமும் அழிவும் உன்கையில் தானய்யா
ஏக்கமும் கொண்டிங்கு வாழ்தலும் ஏனையா
நாற்றங்க ளெல்லாமுன் நாசின் மூச்சையா
மாற்றங்க ளெல்லாமுன் மனமாற்றம் தானய்யா
சீற்றமும் ஏனையா உன் அடியார்கள் தானுய்ய

*தேவைப்படும்போது தேடப்படுவாய். அதுவரை அமைதியாய் இரு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்ணங்கள் ஐந்தாகி வடிவங்கள் பலவாகி
கிரகங்கள் நவமாகி கிண்கிணி நாதமாகி
கலந்திருக்கும் காரிருளை கருணையுடன் நோக்குவித்து
சிறந்த நெறியதனை சீக்கிரம் தந்தருளி
மறைந்திருந்து காத்தருளும் மாயன் மருகோனே
வெறுந்தோலால் போர்த்திருக்கும் வியப்பான உடம்பிதனை
ஒன்பது வாசல் வைத்து உறக்கமும் நினைவும் வைத்து
மனமொன்றை மறையவைத்து புலனைந்தும் தெரியவைத்து
கனம் கொண்ட நெஞ்சத்தை கருணையால் கரையவைத்து
செவியினுள் நாதமாய் உன்நாமம் எனப் பகர்ந்து
பூவினுள் மணம்போல் புகுந்து என் உள்ளத்தில்
உதிரத்தில் உதிரமாய் உறைந்துவிட்ட நாமத்தை
தாய்க்கும் தாயாகித் தந்துவிட்ட தத்துவமே
மாசற்ற முழுநிலவே மறைபோற்றும் சித்திரமே
தேசத்தை யாளும் சிருங்கார வடிவமுதே
பாசத்தை நேசத்தை பற்றியறுத் தெறிந்து
பேருருவம் காட்டி பித்தம் தெளியவைத்து
அருவமும் உருவமும் நீயே யெனக்காட்டி
பிறையது புருவமும் அருளது விழியும் காட்டி
முத்துக்கள் கோர்த்த கவசங்கள் தனைக்காட்டி
வேலும் மயிலும் வினை தனை அறுக்கும் எனக்காட்டி
காத்தருளும் வேலதனை கரங்களில் பதியவைத்து
ஓதுவார் நெஞ்சத்தில் ஓங்கார வடிவம் காட்டி
நீராய் உருக்கி யவர் நெஞ்சம் நெகிழ வைத்து
இன்பமும் துன்பமும் இல்லாதவன் எனக்காட்டி
நோக்குதற்கும் எண்ணுதற்கும் அரிதான நுண்ணுயிராய்
காக்கும் தெய்வமாய் கண்ணிலடங்காப் பெருநிதியாய்
அன்பரின் நெஞ்சத்தில் அணையாத விளக்காகி
சோதி வடிவெடுத்து துடின வாழ் வடக்கி
கதியென்றே காத்திருக்கும் கந்தனவன் கழலடியை
விதியை வெல்வதற்கு விருப்புடனே தாள்பணிந்து
விதியொன்றே முடிவாகும் முடிவொன்றே விதியாகும்
அல்லற் படுகின்ற அரிய பிறவிதனை
சந்நிதிப் பதிவாழும் சங்கரன் புதல்வனே
சொல்லாமற் சொல்லி சொல்லி அறுத்தெறிய
செல்லும் திருப்பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுங்கால்
செல்லாமற் செல்வர் சிறந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| சிவா நறுமணப்பூங்கா | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| கா. தயாபரன் | கொழும்பு | 3மூடை அரிசி |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| சி. பகீரதன் | கனடா | 5000. 00 |
| கா. விஜயசுரேஸ் | சுவிஸ் | 50000. 00 |
| இ. சிவராஜா (இலங்கை வங்கி) | கரவெட்டி (கல்விப்பணி - மாதாந்தம்) | 15000. 00 |
| இ. சசிகுமார் | கோப்பாய் | 1புட்டி அரிசி |
| சி. பானுஷன் | உடுப்பிட்டி | 5000. 00 |
| M. ஜெயநாதன் | மருதடி | 2000. 00 |
| திருமதி தில்லைநாதன் | ஆவரங்கால் | 5000. 00 |
| வி. ஜெயவீரசிங்கம் | அராலி | 4000. 00 |
| ஸ்ரீ. அபிலஷா | பிரான்ஸ் | 10000. 00 |
| இ. பிரதீப் | குப்பிளான் | 15000. 00 |
| இ. ராஜ்மோகன் | பருத்தித்துறை | 1000. 00 |
| சி. லதா குடும்பம் | ஜேர்மன் | 19400. 00 |
| திரு ஜெயபாலன் குடும்பம், திரு தனபாலசிங்கம் குடும்பம் | அல்வாய் | 1000. 00 |
| திரு அம்பிகைபாலன் குடும்பம் | அல்வாய் | 5000. 00 |
| ச. சிவலிங்கம் | இருபாலை | 25k பருப்பு 2மூடை அரிசி |
| த. கிரிஷன் | நல்லூர் | 5000. 00 |
| பா. ஜெயக்குமார் | மானிப்பாய் | 1000. 00 |
| திரு இந்திரகுமார் குடும்பம் | வியாபாரிமூலை | 25000. 00 |
| S. ராசரத்தினம் | சண்டிலிப்பாய் | 1000. 00 |
| N. நவநீதன் | உடுப்பிட்டி | 2000. 00 |
| ஐ. அக்ஷிதா | திக்கம் | 5000. 00 |
| N. திலீபன் | ஏழாலை தெற்கு | 5000. 00 |
| ராசையா | வசந்தி வதிரி | 1000. 00 |
| து. கமலாசினி | கோப்பாய் | 500. 00 |
| இ. சதீஸ் | சுதுமலை | 3000. 00 |
| திரு ஸ்ரீதரன் குடும்பம் | மல்லாகம் | 1000. 00 |
| சி. வைரவிப்பிள்ளை | லண்டன் | 5000. 00 |
| திரு முருகேசு குடும்பம் | கரவெட்டி | 1000. 00 |
| வி. மகேஸ்வரி | கரணவாய் (கனடா) | 5000. 00 |
| செ. தேவகுமார் | மந்திகை | 1000. 00 |
| கா. சோதிலிங்கம் | பிரான்ஸ் | 2000. 00 |

*தேடலும் தேவையும் தீர்வதேயில்லை மனித வாழ்வில்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| சி. யசோதரன் | உடுப்பிட்டி | 2000. 00 |
| திரு ஜெயகாந்தன் குடும்பம் | புலோலி | 5000. 00 |
| திரு நாதன் | சாவகச்சேரி | 1000. 00 |
| சுந்தரம் பிரதேர்ஸ் | யாழ்ப்பாணம் | 3புட்டி அரிசி |
| ம. கருணாநிதி | நல்லூர் | 25k பருப்பு, 1மூடை அரிசி |
| N. லோகநாதன் (புதிய பிரியா ஸ்ரோர்ஸ்) | கண்டி | 5000. 00 |
| ம. கவிதா | பருத்தித்துறை | 5000. 00 |
| கி. சுரேஸ்குமார் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| ரா. நிர்மலா | லண்டன் | 10000. 00 |
| திரு சுஜந்தன் குடும்பம் | சுவிஸ் | 18300. 00 |
| லிங்கம் கூல்பார் | யாழ்ப்பாணம் | 25000. 00 |
| நா. இளஞ்செழியன் | தாவடி | 5000. 00 |
| த. தயாபரி | தாவடி | 5000. 00 |
| பொ. தம்பிராசா | அவுஸ்திரேலியா | 15000. 00 |
| S. ஸ்ரீதரன் குடும்பம் | சாவகச்சேரி (சுவிஸ்) | 9000. 00 |
| G. ஸ்ரீவரதன் | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| புதிய விஞ்ஞானக் கல்லூரி | மீசாலை | 5000. 00 |
| பா. பாலச்சந்திரன் | சுன்னாகம் | 1000. 00 |
| க. கிதுர்ஷன் | நவக்கிரி | 1000. 00 |
| அ. சாயித்திய கருமாரி | இணுவில் | 3000. 00 |
| சுசிலா நகை மாடம் | பருத்தித்துறை | தேங்காய், 1மூடை அரிசி |
| ஆ. மணிமாறன் | அராலிமத்தி | 1000. 00 |
| திரு குணலிங்கம் குடும்பம் | வல்வெட்டி | 10000. 00 |
| க. சாயித்தியன் | யாழ்ப்பாணம் (U.K) | 2000. 00 |
| ச. ரசிதன் | ஏழாலை | 2000. 00 |
| ச. சிவகரன் | ஏழாலை | 1000. 00 |
| A. தர்ஷன் | கோண்டாவில் | 5000. 00 |
| வே. சிவஞானசோதி | சித்தங்கேணி | 1000. 00 |
| க. வருணநாதன் குடும்பம் | யாழ்ப்பாணம் | 3000. 00 |
| ந. சிறீதரன் மூலம் வி. நடராசா ந. யோகரத்தினம் நினைவாக | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| சி. ஸ்ரீஸ்கந்தராசா நினைவாக யுனப் ஸ்ராப் மூலம் | கிளிநொச்சி | 10000. 00 |
| S. ராசரட்ணம் | சண்டிலிப்பாய் | 1000. 00 |
| சு. தனேஸ்வரன் | நல்லூர் | 5000. 00 |
| திரு குமாரகுலசிங்கம் குடும்பம் | மல்லாகம் | 50000. 00 |
| வ. திருக்குமரன் | திக்கம் | 500. 00 |
| திரு கனகரத்தினம் குடும்பம் | லண்டன் | 3000. 00 |

*உங்களை நீங்களே மதியுங்கள் அப்போதுதான் பிறர் உங்களை மதிப்பர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| சச்சிதானந்தா ஆச்சிரமம் | கைதடி | 10k பருப்பு 2புட்டி அரிசி |
| வ. தருமகுலசிங்கம் | நவக்கிரி | 5000. 00 |
| S. துரைராஜா | உடுப்பிட்டி | 1000. 00 |
| S. சௌந்தரீகன் | இணுவில் | 1மூடை அரிசி 5000. 00 |
| வே. பிரியங்கா | நவிண்டில் | 1000. 00 |
| கா. நகுலா | சங்கரத்தை | 18500. 00 |
| G. ஜெயபாலி | அச்சுவேலி | 1000. 00 |
| நா. கண்ணம்மா | மானிப்பாய் | 10000. 00 |
| திரு ஜெயராஜலிங்கம் குடும்பம் | கொக்குவில் | 2000. 00 |
| வீ. மோகனசுந்தரம் | ஏழாலை | 1500. 00 |
| A.V.S. மில் | இணுவில் | 10000. 00 |
| T. நந்தன் | கனடா | 5000. 00 |
| செ. கவிதா | வல்வெட்டி (U.K) | 15000. 00 |
| சே. தீபன் | இன்பர்சிட்டி | 5000. 00 |
| இ. பாலசுப்பிரமணியம் | சித்தங்கேணி | 1புட்டி அரிசி |
| வி. ஜராங்கனி | கொழும்பு | 5000. 00 |
| க. பரமேஸ்வரி | வேலணை | 5000. 00 |
| து. சசிகரன் | உடுவில் | 10000. 00 |
| T. சாந்தரூபி, T. அஸ்வின் | சரசாலை | 5000. 00 |
| வ. நடராசா | சுழிபுரம் மத்தி | 2000. 00 |
| சு. கனகபூஷணம் | சுழிபுரம் மேற்கு | 1000. 00 |
| திரு வரதராஜா குடும்பம் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| த. ஜெயந்தினி | அச்சுவேலி | 5000. 00 |
| கனகம்மா ஆசிரியர் | சிறுப்பிட்டி | 500. 00 |
| மு. கனகசபாபதி | யாழ்ப்பாணம் | 4000. 00 |
| பி. விதுஷ்ஷசர்மா | வவுனியா | 2500. 00 |
| R. கனா | மந்துவில் | 11000. 00 |
| கோ. சகானா | கனடா | 5000. 00 |
| சி. ஹரிசாந் | நவக்கிரி | 5000. 00 |
| த. வினோதன் | கொற்றாவத்தை | 500. 00 |
| திரு நற்குணம் குடும்பம் | நீர்வேலி | 500. 00 |
| த. பாலசுப்பிரமணியம் | கோப்பாய் மத்தி | 2000. 00 |
| ஸ்ரீ. தயசூரியர் | திருநெல்வேலி | 2000. 00 |
| திரு செல்வநாதன் குடும்பம் | லண்டன் | 1000. 00 |
| ஐ. ஆகாஷ் | கொழும்பு-6 | 1000. 00 |
| திரு சண்முகநாதமுதலி மூலம் ப. அக்சரா, ப. காயத்திரி | லண்டன் | 2000. 00 |

*குறிக்கோள் இல்லாத வாழ்க்கை வெறும் குப்பைமேடுதான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நடராசா நினைவாக | உரும்பராய் | 5000. 00 |
| சி. ஞானசுந்தரம் | அச்சுவேலி | 5000. 00 |
| கனகசபை சிவகுரு | பருத்தித்துறை | 5000. 00 |
| R. ஹஷ்விந் | மீசாலை | 1000. 00 |
| சி. மகேந்திரராஜா | லண்டன் | 20000. 00 |
| K. சுலக்ஷன் | சித்தங்கேணி | 15000. 00 |
| த. சிவகுமாரன் ஆசிரியர் | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| M. நிர்மலாதேவி | ஜேர்மன் | 5000. 00 |
| S. சுந்தரலிங்கம் | வட்டுக்கோட்டை | 10000. 00 |
| மாலினி சிவசோதி | கொழும்பு (கல்விப் பணிக்காக) | 5000. 00 |
| சி. வேல்பதி மூலம் க. செல்லம்மா நினைவாக | திருநெல்வேலி | 6500. 00 |
| பரமானந்தன் உதயா | சுழிபுரம் | 20000. 00 |
| K. அற்புதராஜா | அச்சுவேலி | 5000. 00 |
| இ. லோகநாதன் | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| க. சுந்தரலிங்கம் | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| லோ. ஸ்ரீகணேசன் | தெல்லிப்பழை | 1000. 00 |
| த. சிவகரன் | சங்கானை 1புட்டி அரிசி | 3000. 00 |
| ந. காந்தராஜா | சங்கானை | 2000. 00 |
| R. ஜெயக்குமார் | லண்டன் | 10000. 00 |
| ச. யோகாம்பிகை | யாழ்ப்பாணம் | 500. 00 |
| பா. கபில்ரமணன் | இணுவில் | 500. 00 |
| வே. நித்தியானந்தசிவம் | சாவகச்சேரி | 5000. 00 |
| சோ. சிவநாதன் | மல்லாகம் | 2000. 00 |
| திரு கந்தையா குடும்பம் | சாவகச்சேரி | 5000. 00 |
| சி. சிவகுருநாதன் | மானிப்பாய் | 6000. 00 |
| சி. கணநாதன் | குப்பிளான் | 10000. 00 |
| சி. அசிதன் | வட்டுக்கோட்டை | 5000. 00 |
| சி. அன்புமலர் | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| ஏகாம்பரம் ரெக்ஸ் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| கந்தநாதன் நினைவாக | ஊரெழு | 20000. 00 |
| வி. தயாநிதி | கிளிநொச்சி | 1000. 00 |
| சி. சிவகுமார் குடும்பம் | கனடா | 5000. 00 |
| திரு பாலச்சந்திரன் குடும்பம் | கனடா | 3000. 00 |
| ந. மகேஸ்வரி | யாழ்ப்பாணம் (கல்விப் பணிக்காக) | 10000. 00 |
| பா. தினேஸ் | உடுப்பிட்டி | 5000. 00 |
| திரு ஆனந்தகுமாரன் குடும்பம் | கோப்பாய் | 10000. 00 |

(தொடரும்...

*ஆசைப்படுங்கள் தவறில்லை. பேராசையே வாழ்க்கைக்கு கேடு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆனைக்கோட்டை

# அருள்மிகு மூத்த நயினார் ஆலய

### வரலாறு

**–திரு இ. சரவணபவன்** அவர்கள்–

இலங்கைத்தீவின் வடமாநிலத்தின் தலைப்பட்டினமாம் யாழ்ப்பாண நகரின் வடபால் அடுத்து அமைந்துள்ள ஒரு கிராமமே ஆனைக்கோட்டையாகும். பல கல்விமான்களும், தனவந்தர்களும் நிறைந்து வாழ்ந்த இடம். இந்தக் கிராமத்தின் மத்தியிலே யாழ் மானிப்பாய் வீதியில் இருந்து நவாலி போகும் வீதியில் அமைந்துள்ள ஆலயமே அருள்மிகு மூத்த நயினார் திருக்கோயில் ஆகும்.

இந்த ஆலயம் தற்போதைய அமைப்பில் உருவாக்கப்பட்டு கலியப்தம் 4990 சர்வதாரி ஆண்டு ஆவணி மாதம் 29ஆம் திகதி (12.09.1888) மிருகசீர்ஷ நட்சத்திரத்தில் அன்று மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. ஆலய தென்புற வீதிச் சுவரில் இந்த விபரம் எழுத்துமூலம் தெரியவருகிறது. ஆலய அமைப்பைப் பூர்த்தி செய்து கும்பாபிஷேகத்தை சிறப்பாக நடைபெற வழிவகுத்து நிறைவேற்றியவர் சிவகுருநாத முதலியார், நமசிவாய முதலியார் அவர்கள். கும்பாபிஷேகம் நடப்பதற்கு முன்பாகவே ஆலய வெளிவீதியின் தென்கிழக்கு மூலையில் தர்மசத்திரமும், மடமும் மேற்சொல்லப்பட்டவர்களால் கலியப்தம் 4970 சுக்கில வருஷம் சித்திரை மாதம் 1869 - 70இல் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. 1884இல் முருகன் திருக்கோவிலாக மூலஸ்தான கருவறையில் வள்ளி, தெய்வயானை சமேத முருகப்பெருமான் எழுந்தருள பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் நிறைவேறியது. அதன் பின் 1888இல் சோமஸ்கந்த மூர்த்தமாக தற்போதைய நிலையில் ஆலயம் உருவாகி பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இவற்றை

01) தருமசத்திர மடம் முகப்பு சுவரில் பதித்திருக்கும் "கலியப்தம் 4970 சுக்கில வருச சித்திரை மாதம் இவ் வேலை நிறைவேறியது. சி. நமசிவாய முதலியார் தரும சத்திரம் என்ற வாசகங்கள் பொறித்த கல்வெட்டும்.

02) ஸ்நபன மண்டப முகப்புச் சுவரில் (கொடிமர மண்டப மேற்குச் சுவர்) பதித்திருக்கும்

"இத் திருப்பணி செ.சி. - க.மு. சதாசிவமும் செய்வது தற்காலம் அவர்கள் பௌத்திரராகிய சிவகுருநாத முதலியார் நமசிவாயமு அவர்கள் பொருள்கொண்டு திருப்பணியை நிறைவேற்றியது. 1884 பிரதிஷ்டை, 1888 சிவப்பிரதிஷ்டை" என்ற வாசகங்கள் பொறித்த கல்வெட்டும்,

03) சிவலிங்கப்பெருமான் கருவறை பின் சுவரில் பதித்திருக்கும் (2ஆவது கல்வெட்டில் பொறித்த வாசகங்கள் அடங்கியது போன்ற) கல்வெட்டும் நிருபிக்க உதவுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயது முதிர்ந்த பெரியவர்கள் பலரும் பேசிக்கொள்ளும் விதத்தில் கர்ணபரம்பரைக் கதை ஒன்றும் உள்ளது. இந்த ஆலயம் முதலில் கிடுகுகளால் வேய்ந்த சிறு முருகன் ஆலயம் என்றும், ஆனைக்கோட்டை கிராம வாசிகள் எண்ணெய் வியாபாரம் செய்து திரும்பும்போது "என்னையும் கொண்டு போ, என்னையும் கொண்டு போ" என்ற குரல் கேட்டு ஆளரவம் தெரியாமல் பிள்ளையார் போன்ற ஒரு கல் உருவத்தைக் கண்டு அதைக் கொண்டுவந்து கோயிலின் தென்புறம் இருக்கும் தாமரைக் குளத்தின் கரையில் வைத்து வழிபட்டனர் என்றும், ஒரு காலத்தில் முருகன் ஆலயமாக அமைத்து பரிவார மூர்த்தியாக கன்னிமூலையில் மேற்படி விநாயகரையும் வாயு மூலையில் தற்போது தனியாகக் கோயில் கொண்டெழுந்தருளும் மாரியம்மனையும் அமைத்து பிரதிஷ்டா கும்பாபிஷேகம் நடைபெற்றது என்றும் கூறுவார்கள்.

அதே காலத்தில் நமசிவாய முதலியார் மக்கள் வழிபட ஒரு சிவாலயம் கட்டுவிக்க விரும்பினார். அதையறிந்த ஆனைக்கோட்டை மக்கள் மேற்படி முருகன் ஆலயத்தையே சிவாலயமாக நிறைவுறச் செய்யக் கோரினர். அதற்கமைய நமசிவாய முதலியார் அவர்கள் சோமஸ்கந்த மூர்த்தமாக மூலஸ்தான கருவறையில் வள்ளி, தேவசேனா சமேத சுப்பிரமணிய சுவாமியையும், அர்த்த மண்டபம், மகாமண்டபம் அமைத்து அதன் கிழக்குப் புறமாக ஸ்நபன மண்டபத்தில் மகாமண்டப வாயிலுக்குத் தென்புறமாக கோயில் கட்டி "அமிர்த கடேஸ்வரர்" என்ற சிறப்புப் பெயரில் சிவலிங்கப் பெருமானையும் வடபுறமாக கோயில் உண்டாக்கி "அன்னபூரணி" சொரூபமாக அம்மனையும், கன்னிமூலையில் ஆதி விநாயகப் பெருமானையும், வாயுமூலையில் ருக்மணி, சத்தியபாமா சமேத பார்த்தசாரதி சொரூபத்தில் மகாவிஷ்ணு மூர்த்தியையும் அமைக்கவேண்டிய இடங்களில் நவக்கிரகங்கள், சூரிய சந்திரர், வைரவர், மயில், பலீபீடம், நந்தி பலிபீடம் ஆகிய விக்கிரகங்களையும் ஆலயத்திற்கு வெளியில் மாரியம்மனுக்கு தனி ஆலயம் கட்டி பிரதிஷ்டை செய்வித்தார்.

மகா கும்பாபிஷேகத்தை 12.09.1888இல் அக்காலத்தில் பிரபலம் பெற்ற முனீஸ்வரம் சிவஸ்ரீ குமாரசாமிக் குருக்கள், வண்ணை சிவன் கோயில் சிவஸ்ரீ சிவகடாட்சக் குருக்கள் என்ற அம்பி குருக்கள் அதே கோயில் சிவஸ்ரீ வைத்தியநாதக் குருக்கள் ஆகிய மூவரையும் கொண்டு முறையே முருகன், சிவன், அம்மன், மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்து நடாத்தி வைத்தார்கள்.

ஆலயத்தில் சிவலிங்கப் பெருமான், அன்னபூரணி அம்மன் பார்த்தசாரதிப் பெருமாள், வைரவர், நந்திகள், பலிபீடங்கள் முதலியன இந்திய சிற்பிகளால் உருவாக்கப்பெற்று இந்தியாவில் இருந்து வரவழைக்கப்பட்ட சிலைகள், அதே காலத்தில் எழுந்தருளி உற்சவமூர்த்திகள் விநாயகர், சோமஸ்கந்தர், வள்ளி தெய்வானை சமேத சண்முகப் பெருமான், வள்ளி, தெய்வானை சமேத சுப்பிரமணியப் பெருமான், மாரியம்மன் ஆகியன ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டன. நாளடைவில் பெரிய உருவில் ஆனைக்கோட்டை ஸ்ரீ மூத்தநயினார் கோயில் எமது முன்னோர்களால் அமைக்கப்பெற்றது. தற்போதைய நிலையில் கோயிலைக் கட்டி பிரதிஷ்டை செய்து வழிபடத் துவக்கி வைத்தவர் அமரர் ஸ்ரீ சி. நமசிவாய முதலியார் அவர்கள். சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பாக இந்த ஆலயம் ஸ்தாபிக்கப்பட்டது. அதற்கும் 20 ஆண்டுகளுக்கு முன்பாக மடமும் தர்ம சத்திரமும் அன்னாராலே கட்டப்பட்டு நிர்வகிப்பதற்கு

*பழகப் பழக பாலும் புளிக்கும் என்பது அன்பிற்கும் பொருந்தும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய காணி பூமிகளும் தர்மசாதனம் செய்யப்பட்டன. வருமானத்தில் சத்திர தர்மமும் கோயில் பூஜா கைங்கர்யங்களும் நடைபெற்றன. காலப்போக்கில் கட்டுப்பாட்டு முறையில் பொருட்கள் பெறமுடியாத நிலையில் சத்திரதர்மம் தடைப்பட்டு கோயில் நித்திய, நைமித்திய, பூஜைகள் மட்டும் நடைபெறுகின்றன. கோயிலில் திருத்த வேலைகள் செய்வதற்கும் திருப் பணிகள் தொடங்கி பூசை நடைபெறவும் இருப்பதால் அன்பர்கள் பெருமனதுடன் மனமுவந்து பண உதவி செய்ததால் இன்னும் சிறப்பாக கோயிலை நடத்த ஏதுவாகும். முருகப்பெருமான் திருவுளம் பற்ற வேண்டுகின்றோம். அத்துடன் ஊர்மக்கள் கோயிலில் செய்யும் பலவிதமான சரீரத் தொண்டுகளுக்கும் அவர்களுக்கு எங்கள் மனமுவந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் அன்பர்கள், அடியார்கள், தொண்டர்கள், வழிபடுபவர்கள் யாவரும் முருகப்பெருமான் திருவரு ளால் சீரும் சிறப்புமடைந்து தொடர்ந்து முருகப்பெருமான் தொண்டு செய்ய நீடித்த ஆயுளும், திடகாத்திரமும் பெற முருகன் திருவடிகளை தொழுது வணங்குகின்றோம்.

விநாயகப் பெருமான், வள்ளி, தெய்வானை சமேத முருகப் பெருமான் பிரதோஷ நாயகர், சண்டேஸ்வரர் ஆகிய மூர்த்திகள் பிரதிஷ்டை செய்யப்பட்டதுடன் நடேசப் பெருமானுக்கு தனி ஆலயம் அமைத்து நடேசப் பெருமான், சிவகாமி அம்மன், மாணிக்கவாசகர் ஆகிய மூர்த்திகளும் பிரதிஷ்டை செய்யப்பட்டன. இதைவிட ஆலயங்களில் இருக்கவேண்டிய அஸ்திர வேதவர் மூர்த்தியும் இருக்கிறது.

ஆலயத்தின் இரண்டாவது மகா கும்பாபிஷேகம் ஜய வருஷம் ஆவணிமாதம் 7ஆம் திகதி 23.08.1954இல் மிருகசீரஷ நட்சத்திரத்தில் தற்போதைய தர்மகர்த்தா திருவாளர் து. தியாகராசா அவர்கள் அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசாமிக்குருக்கள் அவர்களைக் கொண்டு நடாத்தி வைத்தார்.

மூன்றாவது கும்பாபிஷேகத்தையும் மேற்படி தர்மகர்த்தா அவர்களே ருகிரோற்காரி வருஷம் ஆனி மாதம் 16ஆம் திகதி 30.06.1983இல் அவிட்ட நட்சத்திரத்தில் தற்போது ஆலயத்தின் குருக்களாக சேவை புரியும் சிவஸ்ரீ சு. கைலாசநாதக் குருக்கள் அவர்களைக் கொண்டு செய்வித்தார். கோயிலில் நித்திய, நைமித்திய பூசைகளும், விழாக்களும், மேற்படி தர்மகர்த்தா அவர்களால் சிவஸ்ரீ கைலாசநாதக்குருக்களையும் மகன் சோம சுந்தரக்குருக்களை யும் கொண்டு சிறப்பாக நடைபெறுகின்றன.

ஆலயத்தில் தினசரி காலை 6.30 மணி, பகல் 11.30 மணி, மாலை 5.00 மணி, இரவு 7.00 மணி ஆகிய நேரங்களில் நான்கு காலப் பூசைகள் நடைபெறுவதுடன் காலை, பகல், மாலை, இரவு பூசை நேரங்களுக்கிடையில் கோயில் திறந்திருப்பதனால் பக்தர்கள் தங்கள் வசதிக்கேற்ப தரிசனம் செய்ய வாய்ப்புள்ளது. வெள்ளிக்கிழமைகளில் பகல் சிறப்பான பூசையும், மாதந்தோறும் ஏகாதசிகளில் பெருமாளுக்கு விசேட பூசையும், சகஸ்ரநாமமும் சதுர்த்தி, பிரதோஷம், கார்த்திகை நாட்களில் முறையாக விநாயகர், சிவன், முருகன் ஆகிய மூர்த்திகளுக்கு விசேட பூசை திருவிழாக்களும் நடைபெறுகின்றன. சித்திரை வருடப்பிறப்பு, வைகாசி விசாகம், ஆடிப்பிறப்பு, ஐப்பசி வெள்ளிகள், கார்த்திகை சோம வாரங்கள், தைப்பொங்கல், தைப்பூசம், மாசி சிவராத்திரி பங்குனி உத்தரம் முதலிய விசேட நாட்களில் அபிஷேகமும் திருவிழாக்களும் நடைபெறுகின்றன. வருஷத்தில் குறிக்கப்படும் நடேசர் அபிஷேகங்கள் ஆறும் சிறப்புற நடப்பதுடன் ஆனி, மார்கழியில் உற்சவமும் நிகழும்.

*எண்ணங்கள் அழகானால் வாழ்க்கையும் அழகாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்டாதியில் நவராத்திரி ஒன்பது நாட்களும் கும்ப பூசையும், அம்மனுக்கு சிறப்புப் பூசையும் விஜயதசமியன்று முருகப்பெருமான் எழுந்தருளி சமீவிருஷ பூசை எனப்படும். வன்னி வாழை வெட்டும் விழா இடம்பெறும். ஐப்பசியில் கந்தசஷ்டி விழா நாட்களில் ஆறாம் நாள் சூர சம்ஹாரமும் ஏழாம் நாள் திருக்கல்யாண விழாவும் நிகழும். திருக்கார்த்திகை அன்று சண்முகப்பெருமானுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் நிறைவேற்றி சண்முக அர்ச்சனையாகி வீதிவலம் வந்து சொக்கப்பானை கொழுத்தும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். மார்கழி மாதம் அதிகாலை 10 நாட்கள் திருவெம்பாவை பூசையும் ஒன்பதாம் நாள் சோமஸ் கந்தப்பெருமான் தேரில் எழுந்தருளி வீதிவலம் வருதலும் பத்தாம் நாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறுவதும் விசேட அம்சம். ஆனிமாதம் கொடியேறி பதின்மூன்றாம் நாள் மூன்று வாசல் பெரிய சப்பரத் திருவிழாவும், பதின்னான்காம் நாள் முப்பெரும் தேர்கள் வீதிவலம் வரும் இரதோற்சவ விழாவும் பதினைந்தாம் நாள் தீர்த்தமாகி கொடியிறக்க விழாவும் பதினாறாம் நாள் வள்ளி தினைப்புனக் காவலில் இருக்க முருகன் காட்சி கொடுத்து நடைபெறுகின்ற திருக்கல்யாண விழாவும் காணக்கிடைக்காத காட்சியாகும்.

இன்னும் ஆலயத்தில் கோட்ட விக்கிரகங்களான ஸ்ரீ தெட்சணாமூர்த்தியையும், துர்க்காதேவியையும் பிரதிஷ்டை செய்தால் பக்தர்கள் தங்கள் கிரக தோஷங்கள் நீங்கி வழிபட முழுமைபெற்ற ஆலயமாக இது விளங்கும். அன்றி இராஜகோபுரமும் சித்திரத் தேர் களும் அமைந்தால் வெகு சிறப்பாக இருக்கும். இந்த என் நினைவுகள் ஊர்மக்கள், அன்பர்கள் உதவியுடன் நிறைவுற முருகப்பெருமான் திருவருள் புரிய பிரார்த்திக்கின்றேன்.

அத்தோடு தற்போது 2010ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் பிரதான சிவாச்சாரியார் கதிர் கிருஷ்ணவேல் குருக்களின் தலைமையில் விசேடமாக நடைபெற்றபோது இரண்டு இராஜ கோபுரமும், முருகப்பெருமான் வாசல் கோபுரமும் ஆறுமுக சுவாமி வாசல் கோபுரமும் அமைக் கப்பட்டு தெட்சணாமூர்த்தியும் பிரதிஷ்டை செய்யப்பெற்றும், விநாயகப் பெருமானுக்கு புதிய சித்திரத் தேரும் மகாமாரியம்மனுக்கு புதிய சித்திரத் தேரும் அமையப்பெற்று ஊர்மக்களின் விருப்போடும் ஆலயத்திற்குச் செய்யத்தக்க தொண்டாக செய்து விசேட வழிபாடாக அமையப் பெற்றிருக்கும் திருத்தலமாகவும் ஒளியமைப்பாக பிரகாசிக்கின்ற அமைப்போடு இருப்பது கண்கொள்ளாக் காட்சியாக அமைகின்றன. இவற்றோடு இரத்தினசபாபதி மண்டபமும் உருவாக்கப் பட்டு திருமண மண்டபமும் அமையப்பெற்று விளங்குகின்றது.

-ஆலய தர்மகர்த்தா-

---

பஞ்சபூதங்கள் அனைத்தும் மனிதனின் பிராண தத்துவங்கள். இந்தப் பிராணனே இல்லையெனில் வாழ்க்கையே இல்லை. இதில் வாயு என்கிற பிராண தத்துவம் எங்கும் வியாபித்து இருக்கிறது. உன்னுள், உன்னுடன், உன்னைச்சுற்றி, உனக்கு மேல், உனக்குக் கீழ் என்று எல்லா இடத்திலும் பரவியிருக்கின்றது. உன்னைச் சுற்றியும்கூட அது இருக்கிறது. ஆனால் அது நம் கண்ணில் படுவதில்லை. கையால் பிடிக்க முடியாது. பார்க்க முடியவில்லை, கையால் பிடிக்க முடியவில்லை என்பதால் அதனை இல்லை என்று மறுக்க முடியுமா? இந்த வாயுவே சுவாசம். சுவாசம் போய்விட்டால் சவம். சுவாசமே நமக்குச் சிவம். இந்த சுவாச ரூபத்தில்தான் இறைவன் மனிதர்களுக்கிடையே சஞ்சரித்து அனைவரையும் போஷித்து வருகிறார்.

*இருப்பதை இழக்காமல் இருக்க இழந்ததை மறந்துவிடு.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்



வெளியீடு
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகாசி மாத வாராந்த நிகழ்வுகள்

**05.05.2023 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

**சொற்பொழிவு :- "முருகனின் திருவருள்"**

**வழங்குபவர் :- திரு ஜெ. கோபிராஜ்** அவர்கள்

[ஆசிரியர்]

---

**12.05.2023 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

**"இன்னிசை"**

**(பக்கவாத்திய சகிதம்)**

---

**19.05.2023 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

**சொற்பொழிவு :- "மகாபாரதம்" (தொடர்)**

**வழங்குபவர் :- செஞ்சொற் செல்வன் இரா. செல்வவடிவேல்** அவர்கள்

[ஆசிரியர்]

---

**26.05.2023 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

## ஞானச்சுடர் வைகாசி மாத வெளியீடு

## 305ஆவது மலர்

**வெளியீட்டுரை :- திரு செ. ஞானசபேசன்** அவர்கள்

[இளை. கிராம சேவகர்]

**மதிப்பீட்டுரை :- திரு துரை. கணேசமூர்த்தி** அவர்கள்

[ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு இல: DOP/NEWS/103/2023

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org